விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 13 சனிக்கிழமை (28.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

# தமிழர் தாயகத்தில் நெஞ்சுருக வைத்த மாவீரர் நினைவேந்தல்



## வீடுகளில் ஒளிர்ந்த மாவீரர் நினைவு ஈகைச் சுடர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் விடிவுக்காக தம் உயிரை துறந்தவர்களை நினைவுகூரும் மாவீரர் தின நிகழ்வு நேற்று தமிழர் தாயகத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

பொதுமக்கள் தமது வீடுகளிலும் இருப்பிடங்களிலும் மாவீரர் நினைவு ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (19ஆம் பக்கம் பார்க்க)



## பரந்தனில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியவர் கைது

### புகைப்படம் எடுத்த ஊடகவியலாளர் மீதும் பொலிஸ், இராணுவம் கெடுபிடி

(பரந்தன்)

கிளிநொச்சி - பரந்தன் சந்தியில் மாவீரர்களுக்கு ஈகைச் சுடரேற்றி 19

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாவீரர்களுக்காக மண்டியிட்டு பிரார்த்தனை

(வவுனியா)

வவுனியாவில் பல்வேறு இடங்களில் மாவீரர் நினைவு கூரல் நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றிருந்தன.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், அவர்களின் போராட்ட பந்தலில் மாவீர்களுக்காக மண்டியிட்டு பிரர்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளையில்,



19

## போர்க்கால சூழ்நிலைபோல் தமிழர் தாயகம் எங்கும் குவிக்கப்பட்ட இராணுவம், பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்களில் முடக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் அனைவரும் வீதிகளில் களமிறக்கப் பட்டுள்ளனர். 19

## யாழ்.ஆயர் இல்லம் முன்பாக மாவீரர்களை அஞ்சலிக்க முற்பட்ட மதகுரு கைது

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகியதாக மதகுரு 19

## தவறாகப் புரிந்து கொண்டு கார்த்திகை தீபத்தை தடுத்து விடாதீர்கள்

### இந்து சமயப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் பாரம்பரிய தினமான திருக்கார்த்திகை தினம் நாளை 19

## வடக்கில் 2 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத் 19

## கொரோனாவால் மேலும் 8 பேர் பலி

### உயிரிழப்பு சதத்தை கடந்தது நேற்றும் +473 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோயால மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று 19

## பிரித்தானிய பாராளுமன்றில் மலர்ந்த கார்த்திகைப் பூ



10

## மாவீரர்கள் எம் மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருப்பர்

### அஞ்சலியின்போது நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் உயிர்களைத் தியாகம் செய்த விடுதலை வீரர்கள் ஒவ்வொருவரும் எம் மக்களின் இதயங்கள்லஎன்றும் வாழ்ந்து கொண்டு இருப்பர்.

தனது வாசஸ்தலத்தில் நேற்று விடுதலை வீரரகளு 19



## இராமேஸ்வரம் தீர்த்தக் கடலில் மெழுகுவர்த்தி ஏந்தி மாவீரர்களுக்கு அஞ்சலி

(பனிக்கன்குளம்)

இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரை அருகில் மாவீரர் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நிவர் புயல் காரணமாக
# யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்து 40 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நிவர் புயல் காரணமாக யாழ் மாவட்டத்தில் 5ஆயிரத்து40 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிவர் புயல் மற்றும் மழை காரணமாக யாழ் மாவட்டத்திற்குட்பட்ட 15 பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 1424குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடும் காற்றின் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்குட்பட்ட 15 பிரதேச செயலர் பிரிவினையும் உள்ளடக்கியதாக 444 வீடுகள் பகுதியளவிலும், முழுமையாக 7 வீடுகளும் சேதமடைந்துள்ளன. கடும் மழை மற்றும் காற்றினால் சிறு நடுத்தரத் தொழில்கள் முயற்சியாளர்கள் 68 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன.

215 வறிய குடும்பங்களுக்கு தற்காலிக கூடாரங்கள் வழங்கி வருகின்றோம். 565 வறிய குடும்பங்களுக்கு ஒரு வாரத்திற்குரிய உணவுப் பொருட்களை வழங்குவதற்குரிய அறிவுறுத்தல்களை அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு வழங்கியிருக்கின்றோம். நிவர் புயல் காரணமாக பருத்தித்துறை உட்பட மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேசங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-03,33)

**நல்லூர் பாம் சென்டர்**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட
புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல், கோழி,
Parents சுகாதார முறைப்படி சுத்தம்
செய்து தினமும் காலை 7 மணி தொடக்கம்
மாலை 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

(4775)

**நல்லூர் பாம் சென்ரர்**
**19, முருகேசர் லேன், நல்லூர்.**

## காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கு
# இலங்கை அரசு இனியாவது நீதியை வழங்க வேண்டும்
## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் அந்த அலுவலகத்தினால் காணாமல் போனோர் பெயர்ப்பட்டியலொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

எனவே அதனடிப்படையில் இனியேனும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நீதியையும் உண்மையையும் இழப்பீட்டையும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின்படி காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா இழப்பீட்டுக்கொடுப்பனவாக வழங்கப்பட்டுவந்தது.

எனினும் தற்போதைய அரசாங்கத்தினால் அந்தக் கொடுப்பனவு முழுமையாக நிறுத்தப்படுவதற்கு முன்னதாகவே வரையறுக்கப்பட்ட சில குடும்பங்களே அந்த இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டிருந்தன.

எனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இழப்பீடு முறையாக வழங்கப்பட வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை வலியுறுத்தியிருக்கிறது. (ம-03)



**மாவீரர் தினத்தை நினைவு கூர்வதற்கு அரசாங்கம் விதித்த தடையுத்தரவை மீறி இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நினைவேந்தலை மேற்கொண்டுள்ளார்.**

**நினைவுச் சங்கமம்**

**முப்பத்து மூன்றாம் ஆண்டு** நினைவுப்பதிவு | **பதினைந்தாம் ஆண்டு** நினைவுப்பதிவு



புவித்துவம் 23.03.1913 | அமரத்துவம் 02.10.1987

அமரர்
**சின்னையா செல்லத்துரை**
(பிரபல வர்த்தகர்)
திதி : பூர்வபக்க ஏகாதசி



புவித்துவம் 08.06.1931 | அமரத்துவம் 14.12.2005

அமரர்
**செல்லையா தம்பித்துரை**
(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்பு துறைமுக அதிகாரசபை முன்னாள் அத்தியட்சகர் - மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாகசபை உபதலைவர்)
திதி : சதுர்த்தசி 28.11.2020

நீங்கள் செய்த சேவைகளும் கால்பதித்த தடயங்களும் மனங்களை வென்றிட மதிப்பளிக்கும் தன்மைகளும் மறைந்து போகவில்லை! மறக்கவும் முடியவில்லை! மங்காப் புகழ் நிலைத்திருக்க நீங்கள் இல்லாத உலகத்தில் நாங்கள் எல்லோரும் நினைவுகளை மட்டுமே சுமந்து நிற்கின்றோம். சிறந்த மனிதராய் மண்ணில் வலம்வந்த தந்தையே மறந்து போகாமல் மனங்களில் சுமப்போம் காலம் உள்ளவரை.

" ராஜ் குடில் ", ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(4785)

குடும்பத்தினர்

## இந்திய பாதுகாப்பு ஆலோசகர் மகிந்தவுடன் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேசியுள்ளார். இந்த சந்திப்பு நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு நாடுகளுக்கு இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அஜித் டோவால் இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த மாநாட்டில் பங்களாதேஷ், சீசெல்ஸ் மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்பு மட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்து சமுத்திரத்தின் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பினை விரிவுபடுத்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்த மாநாடு இறுதியாக 2014 ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்றதுடன், 6 வருடங்களின் பின்னர் முதற் தடவையாக இம்முறை கொழும்பில் நடைபெறவுள்ளது. (ம-03)

**1ஆம் ஆண்டு நினைவலைகள்**

அமரர்
**செல்வி ஸ்ரீலோகநாயகி செல்வநாயகம்**
( ஸ்ரீ அக்கா – தையல் அக்கா )
திதி : கார்த்திகை பூர்வபக்க திரயோதசி 28.11.2020

(4783)

காலன் உமது உயிர் பறித்து எமக்கு
சோகத்தைத் தந்தாலும் நீர் செய்த
தையல்கலை என்றும் உமது நினைவாக
மக்கள் மத்தியில் பேரும் புகழுடன்
வியாபித்திருக்கும்.

உமது ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில், தலையாழி. 077 271 9000

சகோதரன் செ. ஸ்ரீலோகநாதன் (ஆசிரியர் )
ஸ்ரீ. வித்தகன்

**துயர் பகிர்கின்றோம்**



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் நீண்டகால உறுப்பினர்
லயன் Dr. S.C. விமலகுமார் அவர்களின்
பாசமிகு தாயார்

அமரர் **மரியசலிற் ஜீவரெட்ணம் சிங்கராயர்**

மண்ணில் 1932.06.24 | விண்ணில் 25.11.2020

அவர்களின் மரணச்செய்தி கேட்டு
மனம் வருந்துகின்றோம். மேலும் அன்னாரின்
ஆத்மா கிறிஸ்தவ விசுவாசப்படி கிறிஸ்துவுக்குள்
வாழ்ந்து மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்
என்றும் அப்படியே யேசுவிற்குள் நித்திரையடைந்
தவர்கள் தேவனுடன் கூடவே வருவார்கள் என்ற
நம்பிக்கையுடன் அவரது
குடும்பத்தினர்க்கு மன வலிமையையும்
பூரண நிம்மதியும் கிடைப்பதாக பிரார்த்திப்போம்.

( C-791 )

வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்கள்
பருத்தித்துறை

# நடந்தது எல்லாம் கனவென மறந்து நாம் ஒன்றாய் வாழ்வோம்

## பாசக் கரம் நீட்டும் சமல்

(கொழும்பு)

**கடந்த காலத்தை மறந்து விட்டு தமிழர்கள் எம்முடன் ஒன்றிணை யுங்கள் என அமைச்சர் சமல் ராஜ பக்ஷ அழைப்புவிடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

உலகில் இரண்டு பில்லியன் மக்கள் அதியுச்ச நீர்த்தட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். உலகில் ஏற்பட்டு வருகின்ற அனர்த்தங்கள் காரணமாக 2030 ஆம் ஆண்டில் 700 மில்லியன் மக்கள் அகதிகளாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கும் இந்த அச்சுறுத்தல் உள்ளது. உலக வெப்பமாதல் நிலைமைகளுக்கு நாமும் முகங்கொடுத்து வருகின்றோம். இதில் உலகிலுள்ள 180 நாடுகளில் அதிக அச்சுறுத்தல் கொண்ட பத்து நாடுகளில் இலங்கையும் உள்ளது.

2020 ஆம் ஆண்டில் உலகில் எச்சரிக்கையான கால நிலை கொண்ட நாடுகளின் பட்டியலில் 6 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது. இலங்கையில் நீர் நிலைகளைப் பாதுகாத்து அதன் மூலமாக குடிநீர் பாதுகாப்பை முன்னெடுக்க நாம் தவறி வருகின்றோம் என்பதை கூறியாக வேண்டும்.

குடிநீர் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை முன்னெடுத்தாக வேண்டும். வறண்ட பகுதிகளில் மக்கள் அதிகளவில் குடிநீர் இல்லாது நோய்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். வடக்கு மாகாணம் அதிக அச்சுறுத்தலில் உள்ளதென்பதையும் கருத்தில் கொண்டே மன்னார், வடமாராட்சி நீர்த்திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டுள்ளமை சகல மக்களுக்குமான பயன்களை பெற்றுக்கொள்ளவே தவிர எந்தவொரு இனத்தையும் தண்டிக்கவோ நிராகரிக்கவோ அல்ல. சகல மக்களுக்கும் ஒரே மாதிரியான சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க நினைக்கிறோம்.

தமிழர்கள் எமது மக்கள். சகல மக்களுக்கும் இடங்களை பெற்றுக்கொடுப்போம். இதில் ஒரு இனத்திற்கு மட்டும் முன்னுரிமை அல்ல. நடந்தவற்றை மறந்து எதிர்காலத்தை நோக்கி பயணிப்போம். யாழ்ப்பாண மக்கள் மிகவும் அதிகமாக கஷ்டப்படுகின்றனர்.

அவர்களின் பொருளாதாரத்தையும் முன்னேற்ற நாம் அனைவரும் ஒன்றினைவோம் என அவர் தெரிவித்தார். (நி-4-7)

# வட மத்திய மாகாணத்தில் எட்டில் ஒருவருக்கு போசாக்கு குறைபாடு

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் எட்டுப்பேரில் ஒருவர் போஷாக்கு குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடமத்திய மாகாணத்தில் நூற்றுக்கு 12.5 பேர், அதாவது எட்டுப்பேரில் ஒருவர் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக 2018 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகமாக அரிசி உற்பத்தி செய்யப்படும் மாகாணங்களில் வடமத்திய மாகாணமும் ஒன்றாகும். இது தொடர்பில் நான் ஆளுநராகவிருந்த குறுகிய காலத்தில் ஆய்வு செய்வதற்காக பல கிராமங்களுக்குச் சென்றேன்.

இங்குள்ள விவசாயிகளுக்கு நெல்லுக்கு போதிய விலை கிடைப்பதில்லை. வறுமையான விவசாயக் குடும்பங்கள் தான் போஷாக்கு குறைபாட்டில் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார். (நி-4-7)

# கைதிகள் கொத்தணி 821

(கொழும்பு)

சிறைக்கைதிகள் மேலும் 22 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 12 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

பூஸா சிறைச்சாலையில் 9 கைதிகளும் ஏனைய கைதிகள் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலும் நேற்று முன்தினம் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 821 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)


45ம் நாள் நினைவஞ்சலி

அமரர். நவரெட்ணம் ரதீஸ்

(கொன்சன்ரைன் லயனஸ்ரெட்ணம்)

பிறப்பிடம்: யாழ்ப்பாணம்-மாமுனை-செம்பியன்பற்று

புலம்பெயர் வதிவிடம்: லுட்சேர்ன் - சுவிஸ்

தோற்றம் 20 09 1977

மறைவு 15 10 2020



பகல் விழுங்கி பலநாள் ஆகியது
இன்னமும் இருள்வயலே
பரவிக் கிடக்கின்றது நிலமெங்கும்

புல்லாங்குழல் தொலைந்தது
குடில்களில் கொடிகள் அரைக் கம்பத்தில்
பிடில்களில் பாடல்கள் முகாரி இராகத்தில்
நடமாடும் மெய்யிழந்த மானிட வெறும் கூடுகளில்
எஞ்சியது தேடல்கள் மட்டுமே

ஆம்... உன்னிடம் தோற்றுப்போனவர்கள் நாங்கள்...!
தோல்வியை ஒப்புக்கொண்டு சரணாகதி அடைகிறோம்

இருப்பினும் குளிர்மலைத் தொடருக்கும்
வெள்ளைப் பூம்பனிக்கும்
அந்தக் கும்மிருட்டுச் சாலையின்
மேல் நடந்த முகிலுக்கும் பதில் தெரியும்
எங்கள் வீட்டுக் கண்ணன் போன திசை...

(4716)



நீங்கா நினைவுகளுடன்...

திரு.கிருஷ்ணபிள்ளை (செல்லக்கண்டு) குடும்பம்.

# நாட்டின் போதனா வைத்தியசாலைகளில் 89 விசேட வைத்திய நிபுணர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், போதனா வைத்தியசாலைகளில் நிலவும் 89 விசேட வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்பில் அரசுக்கு நெருக்கமான வைத்திய சங்கம், பொது சேவை ஆணைக்குழு மீது குற்றம் சாட்டியுள்ளது.

கண்காணிப்பு கொள்கைகளுக்கு முரணாக இடமாற்றங்களை தாமதப்படுத்தும் தேவையற்ற தலையீடுகளை பொது சேவை ஆணைக் குழு மேற்கொண்டதால் இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

வெற்றிடங்களை தனித்தனியாக நிரப்பாமல் 89 வெற்றிடங்களுக்கும் ஒரே பட்டியல் ஊடாக நிரப்புவதாக பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்தமையால் வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை என்பது உள்ளடங்கலாக பொதுச் சேவை ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறைக்கு வழிவகுத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ கையெழுத்து டன், வெளியான ஊடக அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-7)

## பணி வெற்றிடமா? தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர் யுவதிகளில் 6 ஆயிரத்து 614 பேர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக எமது மாவட்ட தொழில் நிலையத்தில் பதிவினை மேற்கொண்டிருக்கின்றார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார். முகாமையாளர், கணக்காளர் தாதியர் நட்சத்திர விடுதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ரெயிலர்ஸ், சந்தைப்படுத்துநர், கணனி இயக்குநர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சுத்திகரிப்பாளர் போன்ற வெற்றிடங்களுக்காக விண்ணப்ப த்திருக்கின்றார்கள்.

ஆர்வத்துடன் தொழிலுக்காக காத்திருக்கும் இவ் இளைஞர், யுவதிகளை தமது நிறுவனங்களில் இணைத்துக் கொள்ள விரும்பும் நிறுவனங்கள் நேரடியாகவோ அல்லது 021 221 9359 இலக்க தொலைபேசியூடாகவோ தொடர்பு கொண்டு பொருத்தமானவர்களை தொழிலுக்கு அமர்த்தலாம் என மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பன்றிகளைப் போல் குப்பைகளை கிளறி கழிவுகளை உண்டு மடியும் யானைகள்

(கொழும்பு)



காட்டு யானைகள் பன்றிகள் போல குப்பை மேட்டைக் கிளறி உண்ணும் காட்சி பார்ப்போரை வேதனையடைய செய்வதாக உள்ளது.

நாட்டில் அண்மைக் காலமாக காடு அழிப்பு நடவடிக்கைகள் அதிகமாகியுள்ளதால், காட்டு யானைகள் தங்களது வாழ்விடங்களை இழந்து உணவு கிடைக்காமல் சுற்றித் திரியும் புகைப்படங்கள் அடிக்கடி செய்திகளில் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் காட்டில் வாழும் யானைகள் தங்கள் வாழ்விடங்களை இழந்து உணவைத் தேடி குப்பை மேட்டிற்கு சென்று அழுகிய காய்கறிகளுடன் ஆபத்து நிறைந்த பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் ஆகியவற்றையும் உண்பது போன்ற காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அதிலும் குப்பைக் மேட்டில் யானைகள் பிளாஸ்ரிக் மற்றும் கண்ணாடித் துகள்கள், அழுக்குகளை உண்பதால் அவை நோய்வாய்ப்பட்டு அதிகளவில் மடிந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இலங்கையில், 2019 ஆம் ஆண்டில் மட்டும் 361 யானைகள் உயிரிழந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (நி-4-7)

# அடிப்படை வாதிகளின் கூற்றை அடியோடு நிராகரித்தனர் மக்கள்

(கொழும்பு)

அடிப்படைவாதிகளே அரசாங்கம் தோல்வி என குற்றஞ் சாட்டுகிறார்கள். சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்துள்ளது. அடிப்படைவாதிகளின் ஆதரவு இல்லாமலே பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய உற்பத்தி முன்னேற்றம் ஆகியவற்றுக்கு அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து முன்னுரிமை வழங்கியது. பெரும் பான்மை மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பயனை பெற்றுள்ளனர்.

அடிப்படைவாதிகளோ ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தோல்வி என குற்றஞ்சாட்டுகிறார்கள். இவர்களின் குற்றச்சாட்டுகளை பெரும்பாலான மக்கள் கவனத்தில் கொள்ளமாட்டார்கள். எதிர்காலத்தில் தோன்றவுள்ள சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2166

Search for people, places and things

### திலக்சி

லவ் பண்றவன கேட்டா... அரேஞ் மேரேஜ் நல்லதுங்குறான்... அரேஞ் மேரேஜ் பண்ணவன கேட்டா லவ் மேரேஜ் நல்லதுங்னுறான்...



ம்.பேசாம அதுல ஒன்னு...
இதுல ஒன்னு பண்ணிட வேண்டியது தான்!

### ஞானம்

எனக்கு இதே டிசைன்ல வேற கலர் இருந்தா காட்டுங்க



அடியேய் நாம துணி எல்லாம் எடுத்து முடிச்சி இப்போ காய்கறி கடைல இருக்கோம்.

### செல்வம்

10 டைனோசர் முட்டை கொடும்மா...



நாட்டு டைனோசர் முட்டையா அல்லது பிராய்லர் டைனோசர் முட்டையா?

### சிவா

மனைவி: உங்களை பார்க்காமலே கல்யாணத்துக்கு OK சொன்னேன். நான்தான் தியாகி...!



கணவர்: உன்னை பார்த்த பின்னாலும் கல்யாணத்துக்கு OK சொன்னேன். நான் தானே பெரிய தியாகி...!

### கஜலக்சி

தினமும் காலையில்



நினைப்பது நடப்பது

### சஜீந்தினி

"பொண்டாட்டி தானே சொல்லிவிட்டு போகிறாள்" என்றும் கணவன் தானே... பேசட்டும் என்றும் விட்டுக் கொடுத்து விட்டால் உள்ளம் துடிக்காது. உடல் வலிக்காது.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாதீடு வெற்றி

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் இரண்டு மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

தவிசாளர் த.ஐங்கரன் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். பின்னர் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வாக்கெடுப்பு நடைபெற்றது.

வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன எதிராக வாக்களித்தன.

ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எண்மர், ஈழமக்கள் ஜனநாயக் கட்சியினர் மூவர், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மூவர், ஐக்கிய தேசியக்கட்சியினர் இருவர் வாக்களித்தனர்.

மேலதிக 2 வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ( நி-4-60)

# விமான நிலையத்திற்கு புதிய பி.சி.ஆர்.இயந்திரங்கள்



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய மேம்படுத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை இயந்திரங்களும் (ஆர்.என்.ஏ. மற்றும் டி.என்.ஏ.ஒளிசுழற்சிக் கருவிகள்) 39,000 கொவிட் - 19 பி.சி.ஆர். பரிசோதனைக் கருவிகளும் நிறுவப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கொவிட் - 19 தொற்று பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்குரிய உதவிகளை புலம்பெயர்வு தொடர்பான சர்வதேச அமைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# விடுதலையாகும் கைதிகளை தனிமைப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

பிணையில் செல்லும் அல்லது விடுதலை செய்யப்படும் சிறைக் கைதிகளை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தி பின்னர் வீடுகளுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பி.சி.ஆர்.பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் பல்லேகல மற்றும் வீரவில உள்ளக சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படவுள்ளதாக சிறைச்சாலை நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தற்போது, கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ள சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்படும் கைதிகளுக்காக மாத்திரம் இந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)


# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 14.12.2020 ஆம் திகதி மு.ப.10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| பிரதான உணவகம் - II | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர்கள் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியான மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் முலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல.021 222 6716) பெற்றுக்கொள்ளலாம்.

(C-786)

பதிவாளர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



# வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம்

## ஆதனப் பெயர் மாற்றம்

### 140/14, பொன்னாலை வீதி, வட்டாரம்–01

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-01 பொன்னாலை வீதியிலுள்ள 140/14 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் கந்தையா பொன்னாசி என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய பெரிய ஆதனத்திற்கு ஆறுமுகம் கந்தையாவும் பெண் பொன்னாச்சியும் சொந்தக்காரர்களாக இருந்து அவர்கள் மரண சாதனமின்றியும் நிர்வகித்து தத்துவம் பெற வேண்டிய பெறுமதிக்கு குறைவான சொத்துக்களையும் விட்டு இறந்தமையாலும் குறித்த ஆதனம் அவர்களது பிள்ளைகளாகிய ஆறுமுகம், சுப்பிரமணியம், சண்முகம், சரவணமுத்து பெண் சரஸ்வதி, அருளம்பலம் பெண் மங்கையர்க்கரசி ஆகியோரை சொரியலாக சென்றடைந்தது என வெளிப்படுத்தி குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் சுப்பிரமணியம் சமதக்கனி முதலாம் பகுதியாகவும், சண்முகம் சுந்தரேசனும், சண்முகம் மகள் வசந்தராணியும், சண்முகம் மகள் காந்திமதியும், சண்முகம் மகள் உமாதேவியும், சண்முகம் மகள் செல்வராணியும், சண்முகம் மகள் அமுதராணியும், சண்முகம் இராசகோபாலும், சண்முகம் மகள் மகாலட்ஷ்மியும் ஆகியவர்கள் இரண்டாம் பகுதியாகவும், சுப்பிரமணியம் சமதக்கனியும் பெண் மங்களமும், பத்மநாதனும் பெண் சாரதாவும், சரவணமுத்து மகள் அன்னலட்சுமியும், சரவணமுத்து மகள் சரவணபவானியும் ஆகியவர்கள் மூன்றாம் பகுதியாகவும், அருளம்பலம் கைம்பெண் மங்கையர்க்கரசி நான்காம் பகுதியாகவும் சேர்ந்து பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2411/26.01.1986 ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

சுப்பிரமணியம் இராசமூர்த்தி பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2412/26.01.1986 ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் சமதக்கனி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த சுப்பிரமணியம் இராசமூர்த்தி இறக்க குறித்த ஆதனம் அவரின் பிள்ளைகளாகிய இராசமூர்த்தி சுரேஸ், இராசமூர்த்தி ரமேஸ், இராசமூர்த்தி மகள் ஜானகி, இராசமூர்த்தி மகள் யாழினி ஆகியோரை பிதாவழி முதுசமாக சென்றடைந்தது.

குறித்த சுப்பிரமணியம் இராசமூர்த்தி மகள் யாழினி பிரசித்த நொத்தாரிசு இ.த.விக்கினராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2143/16.01.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராசமூர்த்தி சுரேஸ் உம், இராசமூர்த்தி ரமேஸ் உம், கந்தசாமி நிதிகுமரன் பெண் ஜானகியும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சுப்பிரமணியம் இராசமூர்த்தி மகள் யாழினி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுப்பிரமணியம் இராசமூர்த்தி மகள் யாழினி ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(4764)

தவிசாளர் / செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். தம்பு கந்தையா

தோற்றம்:- 1934.10.03 மறைவு:- 2019.12.10



அன்பால் எங்கள் அனைவரையும் அணைத்து
அருமை பெருமையாய் எமை வளர்த்து
இன்முகம் காட்டி எம் இல்லத்தை செழிப்பாக்கி
பார்போற்ற வாழ்ந்த எம் தந்தை
ஆண்டு ஒன்று சென்றாலும்
தந்தை உங்கள் நினைவுகள்
தாண்டவில்லை எம்மைவிட்டு தவிக்கின்றோம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:- மகன் சாந்துராஜா
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
குடும்பத்தினர்

(4776)


## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2020

**யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்**

சு.விதுரன் - 186, தே.ஜனுஷாந் - 179, ர.அபிராம் - 170.

**யா/இணுவில் மத்திய கல்லூரி**

பி.பிறிஸ்னிகா - 187, வி.சதுர்சன் - 184, பி.வர்ஜன் - 180, கே.கவிஷன் - 178, எஸ்.லகரிகா - 178, டி.நித்தீஸ் - 177, பி.அறிவழகன் - 171, எஸ்.கஜலக்சன் - 170, கே.யஸ்வர்த்தன் - 163, பி.கவிஷன் - 160.



**வடமராட்சியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். அந்த வகையில் ஜே/350 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைக்கப்படும் பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையாத நிலையில் இருப்பதால் மழை நீர் வெளியேற முடியாது வீடுகளுக்குள் புகுந்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர். (படம்:- மகாலிங்கம்)**

# மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆலயங்கள் தோறும் உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் யாழ்ப்பாணம் கோப்பாய் புத்தூர் கன்னியர் வைரவர் ஆலயத்தில் சிவஸ்ரீ நித்தியசிவானந்தக்குருக்கள் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெறும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாக இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (நி-4)

# பதிவாளர் நாயகம் திணைக்கள செயற்பாடு வழமைக்கு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பதிவாளர் நாயகம் திணைக்கள செயற்பாடுகள் நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளதாக யாழ். மாவட்ட பதிவாளர் நாயகம் க.நடராஜா அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் இரண்டு நாட்களுக்கு பொது மக்களுக்கான சேவை இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்.

பதிவாளர் திணைக்கள அலுவலக ஊழியர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து நேற்று முன்தினம் முழுநாளும் செயற்பட்டதன் காரணமாக நேற்று முதல் பொதுமக்களுக்கான சேவை வழமை போல் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் பதிவாளர் நாயகம் திணைக்கள அலுவலகமானது கடும் மழையின் தாக்கத்தினால் குறித்த கட்டடத்திற்குள் மழை நீர் உட்புகுந்தது.

வெள்ளம் உட்புகுந்த குறித்த அலுவலகத்தினை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஆகியோர் விஜயம் மேற்கொண்டு குறித்து அலுவலகத்தினை பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4-33)

# க.பொ.த.(சா/த) பரீட்சை நடைபெறுமா?

## ஆராயப்படும் என்கிறார் கல்வியமைச்சர்

**(கொழும்பு) கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக எதிர்வரும் சில நாட்களுக்குள் தீர்மானிக்கப்படுமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் ஏனைய சில பகுதிகளிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கின்றது.

மேலும், குறித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தரம் 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் இருக்கின்றது.

ஆகவே, கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக எதிர்வரும் சில நாட்களுக்குள் ஆராய்ந்தே உத்தியோகபூர்வமான தீர்மானத்தை அறிவிக்க முடியும்.

அதாவது, பரீட்சைகளை குறித்த தினத்திலேயே நடத்துவது என தீர்மானித்தால் சாதாரண தரத்தில் உள்ள அனைத்துப்பாட அலகுகளையும் உள்ளடக்குவதா?.அல்லது இதுவரையில் நிறைவு செய்யப்பட்டுள்ள பாட அலகுகளில் மாத்திரம் பரீட்சையை நடத்துவதா? என்பது குறித்து ஆராயப்படும் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# நெடுந்தீவில் கூடிய மழை வீழ்ச்சி

## வானிலை ஆய்வு மையம் தெரிவிப்பு

(குப்பிழான்)

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலத்தில் திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளின் மழை வீழ்ச்சி நிலவரப்படி நெடுந்தீவில் கூடிய அளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் நெடுந்தீவில் 57.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் அச்சுவேலியில் 53.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நயினாதீவில் 50.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் சாவகச்சேரியில் 34.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் அம்பனில் 33.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் தெல்லிப்பழையில் 30.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் திருநெல்வேலியில் 28.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பருத்தித்துறையில் 26.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் யாழ். நகரிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 19.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் ஆனையிறவில் 12.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் யாழ்ப்பாணம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் 9.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் கிளிநொச்சியில் 6.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் கிளிநொச்சி அக்கராயனில் 2.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் இரணைமடுப் பகுதியில் 1.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவு வள்ளிபுனம், ஒட்டுசுட்டான், அளம்பில் ஆகிய பகுதிகளில் மழை வீழ்ச்சி எதுவும் பதிவாகவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-18)

# பல்கலைக்கழகங்களின் தரவரிசை; யாழ்.பல்கலை.மூன்றாம் இடத்தில்




(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் தரப்படுத்தல் பட்டியலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

www.www.topuniversities.com எனும் இணையத்தளத்தினால் பல்கலைக்கழகங்களை அவற்றின் தர நிர்ணய நியமங்களின் அடிப்படையில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தரப்படுத்தலிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்தை அடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழகத் தரப்படுத்தல் வரிசையில் பேராதனை பல்கலைக்கழகம் முதலாவது இடத்தையும் கொழும்பு பல்கலைக் கழகம் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளதோடு, மொரட்டுவ பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் ஆகியன முறையே நான்காம், ஐந்தாம் இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, போதனை சார் வளஆளணியினரின் எண்ணிக்கை, கற்பிக்கப்படும் கற்கை நெறிகள், ஆராய்ச்சிக் கட்டுரைகளின் சர்வதேச சமர்ப்பணம் போன்ற பல அளவு கோல்களின் அடிப்படையிலேயே இந்தத் தரப்படுத்தல் தீர்மானிக்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தல் வரிசையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நான்காம் இடத்திலும் மொரட்டுவ பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்திலும் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-4-33)

# ஷானி அபேசேகரவின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

சாட்சியங்களை மறைத்த குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப் பாளர் ஷானி அபேசேகரவின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 7 ஆம் திகதி வரை அவர் மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஷானி அபேசேகர, உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகி யோரின் பிணை மனுக்கள், கம்பஹா மேல் நீதிமன்றில் நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்த போதே நீதிபதி நிமல் ரணவீர இதனை அறிவித்தார். (ஐ-4)

## பால்நிலை சமத்துவ முன்னேற்றம்

# கொவிட்-19 நெருக்கடி அபகரித்து விடலாம்

(ஜெனீவா)

பால்நிலை சமத்துவத்தில், கடந்த 25 வருடகாலம் அடைந்த முன்னேற் றங்களை கொவிட்-19 நெருக்கடி அபகரித்து விடக்கூடும் என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தப் பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக, பெண்கள், வீடுகளை யும், குடும்பங்களையும் பராமரிப் பதற்கு கணிசமான அளவு கூடுத லாக வேலை செய்ய வேண்டியுள் ளது என ஐ.நா. பெண்கள் அமைப் பின் பிரதி நிறைவேற்றுப் பணிப் பாளர் அனிதா பாத்தியா தெரிவித்தார்.

பெண்கள் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை இழந்து, உடல் ஆரோக்கிய சீர்கேட்டால் பாதிக் கப்படக்கூடும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# 14 கலைஞர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் பிரபல நடிகர், நடிகைகள் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட் டுள்ளது.

முதலாவது ஒரு நடிகருக்கு கொரோ னாத் தொற்று ஏற்பட்டமையினால் ஏனையவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவருக்கு ஏற்பட்டதனை கருத்திற் கொள்ளாமல் தொடர்ந்தும் படப்பிடிப்பு களை மேற்கொண்டமையினால் ஏனைய 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இந்நிலையில் அவர்களுக்கு அருகில் செயற்பட்டவர்களை தனிமை ப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ஐ-4)


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

Congratulations!



திரு. கணபதிப்பிள்ளை வரதவேல்

(சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர், சத்திரசிகிச்சைத்துறை மருத்துவ பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

27.11.2020 அன்று மணிவிழாக் கண்ட எமது குடும்பத் தலைவன் திரு. கணபதிப்பிள்ளை வரதவேல் (சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர், சத்திரசிகிச்சைத்துறை, மருத்துவபீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களை ஆலடிப்பிள்ளையார் ஆசியுடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

"மிதுஜெயம்" கிருச்சியால், அல்வாய்.

மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளை.

(4750)



மணிவிழா நாயகியை உளமார வாழ்த்துகின்றோம்

இன்றைய தினம் (28.11.2020) மணிவிழா காணும் நாயகி

திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன்



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி உடற்கல்வி ஆசிரியை திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன் அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

சேவை விபரம்

கிளி/ முருகானந்தா மகா வித்தியாலயம் 1997.04.01 – 2001.05.30

யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 2001.05.31 – 2015.02.11

யா/ மீசாலை விரசிங்கம் மத்திய கல்லூரி 2015.02.12 – 2020.11.27

வாழ்த்துவோர்:

உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், உடற்கல்வி ஆசிரியர்கள்.

தென்மராட்சி கல்வி வலயம்

(C-776)



மணிவிழா நாயகியின் சேவை நலன் பாராட்டு



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியை

திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன்

(SLTS-1 பயிற்றப்பட்ட உடற்கல்வி)

மாணவர் வாழ்வும் வாக்கும் செம்மையுற உடற்கல்வி பாடத்தில் மாகாண மற்றும் தேசிய மட்ட வெற்றிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டியாக இருந்து 31 வருட கல்விப் பணியில் அளப்பரிய சேவையினை வழங்கி இன்று 28.11.2020 சனிக்கிழமை ஓய்வு பெறும் எம்து கல்லூரியின் மதிப்புக்குரிய ஆசிரியை திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன் அவர்கள் வேம்படி விநாயகனின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| கிளி/ஆனையிறவு சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலை | (05.01.1989 – 12.01.1990) |
| கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம் | (13.01.1990 – 05.04.1990) |
| கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் | (07.04.1990 – 06.06.1990) |
| கிளி/கனிஸ்ர மகா வித்தியாலயம் | (08.06.1990 – 10.10.1990) |
| கிளி/ஆனையிறவு சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலை | (12.10.1990 – 31.12.1990) |
| கிளி/முரசுமோட்டை அச்சு அந்தோனியார் வித்தியாலயம் | (01.01.1991 – 31.12.1991) |
| கிளி/முருகானந்த மத்திய கல்லூரி | (01.01.1992 – 30.10.1999) |
| யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | (01.11.1999 – 16.01.2001) |
| கிளி/இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | (17.01.2001 – 28.05.2001) |
| யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | (17.01.2001 – 28.05.2001) |
| யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | (28.05.2001 – 07.08.2001) |
| யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | (30.08.2001 – 10.02.2015) |
| யா/மீசாலை விரசிங்கம் மத்திய கல்லூரி | (11.02.2015 – 28.11.2020) |

கல்லூரிச் சமூகம், யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

(4763)

# தனிமைப்படுத்தல் பயணிகளுடன் சென்ற பேருந்து விபத்து

## 17 பேர் காயம்

(முறிகண்டி)

ஓமான் நாட்டிலிருந்து நாடு திரும்பிய 25 பயணிகளை யாழ்ப்பாணம் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு ஏற்றிவந்த சொகுசு பேருந்து கட்டுப்பாட்டை இழந்து, கிளிநொச்சி, பளை- ஆனைவிழுந்தான் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று காலை குறித்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.இச்சம்பவம் தொடர்பாக மேலும்தெரியவருவதாவது, குறித்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, நீர் விநியோக குழாய் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது பேருந்தில் பயணம் மேற்கொண்ட 17 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் படுகாயமடைந்த 3 பேர், உடனடியாக அம்புலன்ஸ் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-4-30-100-316)







தொடர்ச்சியாக பெய்த மழையால் வடமராட்சி கரவெட்டி மேற்கு ஜே/363 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 167 குடும்பங்களைச் சேர்ந்த 512 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அவர்களுக்கான உதவிகளை கிராம உத்தியோகத்தர் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (படம்:-மகாலிங்கம்)

# உயிரிழந்த மாணவர்களுக்கு வீடுகளில் அஞ்சலி



(பணிக்கன்குளம்)

ஜயன்கன்குளம் பகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை இராணுவத்தால் நோயாளர் காவு வண்டி மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்ட 8 பேரின் 13 ஆம் ஆண்டு நினைவு நினைவு தினம் நேற்றாகும்.

கடந்த காலங்களில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் குறித்த உறவுகளின் உடல்கள் புதைக்கப்பட்ட ஜயன்கன்குளம் இந்து மயானத்தில் இடம் பெற்று வந்தது.

இந்நிலையில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடையுத்தரவு பெற்ற மல்லாவி பொலிஸார் குறித்த இடத்திலும் மாவீரர் தின நிகழ்வுக்கான தடையுத்தரவை பெற்று படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் புதைக்கப்பட்ட ஜயன்கன்குளம் மயானத்தில் குறித்த மாண வருக்கான நினைவேந்தல் நிகழ்வையும் தடை செய்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் உயிரிழந்த பிள்ளைகளின் பெற்றோர்கள் சிலர் தங்களுடைய வீடுகளில் தங்களுடைய பிள்ளைகளின் புகைப்படங்களை வைத்து அதற்கு மலர் தூவி அஞ்சலியை செலுத்தினர். (நி-4-281)

# தனிமைப்படுத்தலுக்காக வந்தவர்களுக்கு தொற்றில்லை

## அச்சம் இல்லை என்கின்றார் சுகாதார வைத்திய அதிகாரி

(தருமபுரம்)

யாழ்.விடத்தல் பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு நேற்று சென்ற பேருந்து விபத்திற்குள்ளானதில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை, அங்கு வேறு சிகிச்சைகளுக்காக வருகை தந்திருந்த மக்கள் பதற்றமடைந்தனர்.

இவ்வாறு வெளிநாட்டிலிருந்து வருகை தந்த நபர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டமையால் வைத்தியசாலையில் பதற்றமான சூழல் நிலவியது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி என்.சரவணபவான் தெரிவிக்கையில்,

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அப்பரிசோதனையில் அவர்களுக்கு தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இது தொடர்பான சந்தேகங்களால் அச்சமடையத் தேவையில்லை என தெரிவித்துள்ளார். (நி-4-316)

# மூடியிருந்த கடைகளை திறக்குமாறு அச்சுறுத்தல்

(பணிக்கன்குளம்)

வருடம் தோறும் கார்த்திகை 27 இல் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இம்முறை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நீதிமன்றத்தினால் தடைசெய்யப்பட்டு தமிழ் மக்கள் தங்களுடைய உயிரிழந்த பிள்ளைகளை மாவீரர் துயிலுமில்லங்களில் சென்று நினைவுகூருவதற்கு முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் நேற்றைய தினம் புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு நகர வர்த்தகர்கள் தங்களுடைய கடைகளை பூட்டி கடையடைப்பு மேற்கொண்டனர்.




குறித்த இரண்டு நகர் பகுதிகளுக்கும் சென்று பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இரா ணுவ புலனாய்வாளர்கள் குறித்த கடை உரிமையாளர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாக கடையைத் திறக்குமாறு அச்சுறுத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும் வர்த்தகர்கள் தங்களுடைய கடைகளை திறக்காது தொடர்ந்தும் கடையடைப்பினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4-281)



அராலி மத்தி, ஓடைக்காடு முதலாம் ஒழுங்கை வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டது. பிரதேச சபை உறுப்பினர் க.இலங்கேஸ்வரனின் வேண்டுகோளிற் கிணங்க வலி.மேற்கு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டு பாதீட்டில் இருந்து ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு குறித்த வீதி புனரமைக்கப்பட்டது.(படம்:-கஜிந்தன்)

# இராசிபலன்

28.11.2020
கார்த்திகை 13, சனிக்கிழமை
திரயோதசி முற்பகல் 11.46 மணிவரை
பரணி பின்னிரவு 4.53 மணிவரை
சுபநேரம் 3.13-4.43 மணிவரை
இராகுகாலம் 9.13-10.43 மணிவரை
சந்திராஷ்டமம்:- சித்திரை
சித்தாமிர்தம் வளவன்


மேஷம்

சிலர் மீது காரணம் இல்லாமல் கோபப்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்கள் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், போசன சுகமுண்டு.


ரிஷபம்

எதிலும் வேகத்தை குறைத்து பொறுமையாக செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அதிகாரிக்கும் நாள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


மிதுனம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இனிய செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம், பயணத்தால் பணவரவு கிடைக்கலாம், செய் தொழில் மேன்மையுண்டு.


சிம்மம்

எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், அன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.


கன்னி

மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


துலாம்

நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.


தனுசு

உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புத்திசாதுரியமாக செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


மகரம்

உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பம் கூடும் நாள்.


கும்பம்

மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவார், வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பக்குவமாய் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.


மீனம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் கூடும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

உண்மையான அன்புக்காக கொஞ்ச நேரம் நடிக்கலாம்.

# ஷானி அபேசேகரவிற்கு மருத்துவ பராமரிப்பு வழங்கப்பட வேண்டும்

## லசந்தவின் மகள் கோரிக்கை



**(கொழும்பு)**

**குற்ற விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிற்கு உரிய மருத்துவ பராமரிப்பு வழங்கப்பட வேண்டுமென படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

சிறைச்சாலை திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் துசார உபுல்தெனிய, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன, பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரட்ன உள்ளிட்ட சிலருக்கு இந்த கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட தம்மை போன்ற குடும்பங்களுக்கு பக்கச் சார்பற்ற வகையில் விசாரணைகளை நடத்தும் சொற்ப அளவிலான பொலிஸ் அதிகாரிகளில் ஷானியும் ஒருவர் என்றும் ஷானி போன்றே ஏனைய அரச அதிகாரிகளுக்கும் முதுகெலும்பு இருந்திருந்தால் தாம் நேசிக்கும் உறவுகள் இன்று வரையில் உயிருடன் இருந்திருக்கக் கூடும் என்றும் கடிதத்தில் லசந்தவின் மகள் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# பொலிஸ்மா அதிபராக பதவியேற்று கடமைகளை பொறுப்பேற்ற விக்ரமரத்ன

(கொழும்பு)

நாட்டின் 35 ஆவது பொலிஸ்மா அதிபராக சி.டி.விக்ரமரத்ன பொலிஸ் தலைமையகத்தில் நேற்று பதவியேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

சுமார் ஒன்றரை வருடங்களாக வெற்றிடமாக உள்ள பொலிஸ்மா அதிபர் பதவிக்கு, பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவை நியமிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பரிந்துரை செய்தார்.

அந்த பரிந்துரையை ஆராய்ந்த பாராளுமன்ற பேரவை இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 35 ஆவது பொலிஸ்மா அதிபராக, தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபரான சி.டி.விக்ரமரத்னவை நியமிக்க அனுமதி வழங்கியது. இந்நிலையிலேயே அவர் நேற்று தனது புதிய பதவியை பொறுப்பேற்றுள்ள நிலையில், கடமைகளையும் பொறுப்பேற்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பொலிஸ்மா அதிபராக இருந்த பூஜித ஜயசுந்தர கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட நிலையில், அவ் விடுமுறையில் இருந்தபோதே கடந்த ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்றார்.



அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டது முதல் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தற்போதுவரை பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆட்சி மாற்றத்தின் பலனை அனைத்து மக்களும் பெறவேண்டும்

(கொழும்பு)

மக்களுக்கு குறுகிய கால பயனை வழங்கும் நோக்கில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்படவில்லை.

ஆட்சி மாற்றத்தின் பலனை மக்கள் நிரந்தரமாகப் பெற வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு வரவு-செலவு திட்டத்தில் அதிக நிதி பிரதான அமைச்சுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என கிராமிய வயல்கள் சார்ந்த குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள், நிர்மாண அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றுவது 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் பிரதான இலக்குகளுக்கு உள்ளது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அதிக நிதி இம்முறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஆட்சி மாற்றத்தின் பலனை மக்கள் நிரந்தரமாகப் பெற வேண்டும் என்ற தூர நோக்க கொள்கை அடிப்படையில் வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடவில்லை. நீதித்துறை தற் போது சுயாதீனமாகவே செயற்படுகிறது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# குணமடைந்தோர் 16,226

(கொழும்பு)

நாட்டில் மேலும் 410 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளதாக தேசிய தொற்று நோயியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 226 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 99 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கைதிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)


வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சிறைச்சாலையில் உள்ள சில கைதிகள் கூரை மீதேறி குறித்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் துசார உபுல் தெனிய தெரிவித்துள்ளார். (ஜ-4)




மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத்தின் தேசிய மலர், நேற்று இரவு மத்திய லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டரில் உள்ள பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் ஒளிர விடப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்று நோயால் ஏற்பட்ட கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தமிழ் விடுதலைப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரித்தானிய வாழ் தமிழ் செயற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நடவடிக்கையில், கார்த்திகைப் பூவின் உருவத்தையும், “நாங்கள் நினைவில் கொள்கிறோம்” என்ற சொற்பதம் அடங்கிய வாசகமும் ஒளிரவிடப்பட்டுள்ளது.




# ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டோருக்கு வாழ்நாள் சிறை




(அங்காரா)

துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டோருக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

துருக்கியில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி தாயீப் எர்டோகனின் ஆட்சியை கவிழ்க்க இராணுவத்தில் ஒரு பிரிவு முயற்சித்தது. ஆனால் மக்கள் ஆதரவுடன் ஜனாதிபதி அந்தப்புரட்சியை முறியடித்தார்.

அமெரிக்காவில் வசித்து வரும் துருக்கியை சேர்ந்த மத குரு பெதுல்லா குலென் தான், ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு காரணம் என தாயீப் எர்டோகன் குற்றம்சாட்டினார். அதனை தொடர்ந்து ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க தொடங்கினார்.

இந்த நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு தலைமை தாங்கி வழிநடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட இராணுவ கொமாண்டர்கள், விமானப் படை தலைவர்கள் மற்றும் விமானிகள் உள்ளிட்ட உயர் மட்ட பிரதிநிதிகள் மீதான வழக்கில் நேற்று முன்தினம் நீதிமன்றில் இறுதி விசாரணை நடந்தது.

இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்களுக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். எனினும் சரியாக எத்தனை பேருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது என்பது குறித்த தகவலை துருக்கி நீதித்துறை வெளியிடவில்லை. (நி-4)


# ஜப்பானில் பரவும் பறவைக் காய்ச்சல்

(டோக்கியோ)

ஜப்பானில் மூன்று மாகாணங்களில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் கொரோனாத்தொற்றுடன் மக்கள் போராடிக் கொண்டிருக்கும் போது ஜப்பானில் பறவைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டு சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (நி-4)

# பிளாஸ்ரிக்கை உண்டு உயிரிழக்கும் ஒட்டகங்கள்



(டுபாய்)

டுபாய் பாலைவனப் பகுதிகளில்பிளாஸ்ரிகை உண்டு உயிரிழந்த நூற்றுக்கணக்கான ஒட்டகங்களின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

டுபாய் புறநகர் பாலைவன பகுதிகளில் ஏராளமான ஒட்டகங்கள் வசித்து வருகின்றன. இந்த ஒட்டகங்களின் நலனை பராமரிக்க மத்திய கால்நடை ஆராய்ச்சி ஆய்கவத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சமீபத்தில் பாலைவன பகுதிகளில் மேய்ச்சலுக்காக செல்லும் ஒட்டகங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாலைவனப் பகுதிகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் அங்கு உயிரிழந்த ஒட்டகங்களின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த எலும்புக்கூடுகளின் அருகே மூட்டையாக பிளாஸ்ரிக் குவியல்கள் இருந்தன.

அதனை ஆய்வு செய்து பார்த்தபோது அவை அனைத்தும் அந்த ஒட்டகங்கள் சாப்பிட்டுள்ளது தெரியவந்துள்ளது. வயிற்றில் இருந்த பிளாஸ்ரிக் குவியல் உக்காமல் வெகு நாட்களாக பாலைவனப் பகுதியில் அப்படியே கிடந்துள்ளது.

டுபாய் மத்திய கால்நடை ஆய்வகத்தின் அறிவியல் இயக்குநர் தெரிவிக்கையில்,

வயிற்றை நிரப்ப பிளாஸ்ரிக்குகளை உணவாக அந்த ஒட்டகங்கள் உட்கொண்டுள்ளன. இது உண்மையில் வேதனையளிப்பதாக உள்ளது.

இதன் மூலம் சீரணமாகாமல் கடுமையான வயிற்று வலி ஏற்படும். பட்டினி காரணமாகவும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாகவும் ஒட்டகங்கள் பிளாஸ்ரிக்கை உணவாக சாப்பிடுகிறது.

பாலைவனப் பகுதிகளில் சுற்றுலாவுக்கு வருபவர்கள் பிளாஸ்ரிக் கழிவுகளை வீசி செல்வதால் அவைகளை ஒட்டகங்கள் சாப்பிட நேரிடுகிறது. எனவே பொதுமக்களுக்கும் ஒட்டகங்கள் மற்றும் கால்நடைகளைப் பாதுகாக்கும் விதமாக சுகாதாரமாக கழிவுகளை அகற்ற வேண்டும்.

இதுவரை பிளாஸ்ரிக்கை உட்கொண்டு சுமார் 300 ஒட்டகங்கள் பாலைவனப் பகுதியில் பலியாகி உள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த ஒட்டகங்களின் வயிற்றில் சுமார் 53 கிலோ எடையுள்ள பிளாஸ்ரிக் இருந்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் சமஸ்கிருதத்தில் பதவியேற்ற இந்திய வம்சாவளி எம்.பி



(வெலிங்டன்)

நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் புதிய எம்.பி.க்கள் பதவியேற்பு விழாவில் இந்திய வம்சாவளியை சேர்ந்த கவுரவ் சர்மா இந்திய மொழியான சமஸ்கிருதத்தில் பதவியேற்றார்.


நியூசிலாந்தில் அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்தது. இதன் மூலம் ஜெசிந்தா 2 ஆவது முறையாக பிரதமர் ஆனார்.

இந்தத் தேர்தலில் ஹமில்டன் மேற்கு தொகுதியில் இந்திய வம்சாவளியை சேர்ந்த டாக்டர் கவுரவ் சர்மா (வயது 33) தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை புதிய எம்.பிக்கள் பதவி யேற்றனர்.

அப்போது கவுரவ்சர்மா இந்திய மொழியான சமஸ்கிருதத்தில் பதவியேற்றார். (நி-4)

# வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்



(சென்னை)

வங்கக் கடலில் மேலும் ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், நாளை வங்கக் கடலின் தென் கிழக்கு பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மேலும் வலுப்பெறும் என்றும், அதன் பின்னரே அது புயலாக உருவெடுக்குமா? இல்லையா? என்பது தெரிய வரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. (நி-4)

# மலசலகூட வசதியின்றி 400 பாடசாலைகள் உள்ளன

(கொழும்பு)

நாட்டில் நீர் மற்றும் மலசலகூட வசதிகளற்ற 400 பாடசாலைகள் உள்ளன. அவ்வாறான பாடசாலைகளை திறப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை எனத் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, இவ்வாறான பாடசாலைகளுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்திலிருந்து இணையவழியூடாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரு வாரங்களாக இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களிடமும், சாதாரண தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களிடமும் சாதாரண தரப்பரீட்சை குறித்த தீர்மானத்தை எடுப்பதற்கான தகவல்கள் கோரப்படுகின்றன.

சாதாரண தரப் பரீட்சையில் 54 பாடங்கள் உள்ளன. அவற்றில் மத பாடங்கள் 5, மொழி பாடங்கள் 2, தொகுதி பாடங்கள் மற்றும் கட்டாய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், வரலாறு உள்ளிட்டவை உள்ளடங்குகின்றன. இவற்றில் நிறைவு செய்ய வேண்டிய பாட அலகுகளும் உள்ளன.

இவ்வருடத்தில் 194 பாடசாலை நாட்களில் 87 நாட்கள் மாத்திரமே பாடசாலைகளில் நேரடியாக கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இணைய வழியூடாக இடம்பெற்ற கற்பித்தல் நடவடிக்கைகளில் எந்தளவில் பாட அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்ற தகவல்கள் தற்போது கோரப்படுகின்றன.

நாட்டில் நீர் மற்றும் மலசலகூட வசதிகள் அற்ற சுமார் 400 பாடசாலைகள் உள்ளன. அவ்வாறான பாடசாலைகளுக்கு அவ்வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அவை தொடர்பில் தொடர்ந்தும் ஆராயப்பட்டு வருகிறது. இவ்வசதிகள் அற்ற பாடசாலைகளை திறப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை.

நீர் மற்றும் மலசலகூட வசதிகள் அற்ற பாடசாலைகள் தொடர்பில் நானும் மாகாண, வலய மற்றும் தொகுதி ரீதியான பணிப்பாளர்கள் இணைந்து பிரத்தியேகமாக நடவடிக்கை எடுப்போம் என அவர் சுட்டிக்காட்டினார். (நி-4-7)

## உத்தரவாத விலையில்

# ஒரு ஹெக்டேயருக்கு 1000 கிலோ நெல் கொள்வனவு



(கொழும்பு)

உர மானியத்தைப் பெறும் ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் அடுத்த பருவத்திலிருந்து ஒரு ஹெக்டேயருக்கு 1000 கிலோ நெல் தலா 50 ரூபாய் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யப்படும் என்று கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நெல் களஞ்சியப்படுத்தலை திறமையாகவும் பாதுகாப்பாகவும் மாற்றியமைப்பதற்காக களஞ்சிய வசதிகளை சரிசெய்ய நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ரூ.100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நெல் மீதான ஏகாதிபத்தியத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், நெல் விலையை முறையான வகையில் பராமரிக்கவும் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நெல் நிலங்களை முறையாக நிர்மாணித்தல், பொருளாதார மையங்களை புதுப்பித்தல், விவசாய மத்திய நிலையங்களை புதுப்பித்தல், தேவைக்கேற்ப புதிய ஆட்சேர்ப்பு மற்றும் மாவட்ட அளவில் உர விநியோகம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (நி-4-7)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியீடு

(கொழும்பு)

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்குக் கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் காணாமல்போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலொன்றை வெளியிட்டிருக்கிறது.

இப்பட்டியலை கொழும்பிலுள்ள காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திலும் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மாத்தறையிலுள்ள அதன் பிராந்திய அலுவலகங்களிலும் பார்வையிட முடியும்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள், மாவட்ட செயலகங்கள் மூலமாகப் பெறப்பட்டு, பின்னர் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஊடாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் வேண்டுகோளின்பேரில் ஆயுதப்படையினரால் வழங்கப்பட்ட போரில் காணாமல்போன படையினரின் பட்டியல் ஆகிய விபரங்களின் அடிப்படையிலேயே மேற்படி பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியலில் காணாமல்போனவருக்கென காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் ஒதுக்கப்பட்ட உசாத்துணை இலக்கம், காணாமல்போனவரின் பெயர், காணாமல்போன அல்லது காணாமலாக்கப்பட்ட திகதி, காணாமல்போன நபர், இறுதியாக வசித்த மாவட்டம் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

காணாமல்போனவர்களின் தகவல்களை ஒன்றிணைக்கும் செயன்முறையின் ஓரங்கமாகவே இந்தப் பட்டியல் பிரசுரிக்கப்பட்டிருப்பதாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

இந்நிலையில் தற்போது பிரசுரிக்கப்பட்டிருக்கும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்கள் காணாமல்போனோரின் உறவினர்கள் மீளாய்வு செய்வதுடன், ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றைத் தமக்கு அறிவிக்கமுடியும் என்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் குறிப்பிட்டிருக்கிறது. (நி-4-7)

# 328 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த மேலும் 328 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய, அவர்கள் ஐக்கிய அரபு இராச்சியம், அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்தே வருகை தந்துள்ளதாக கொரோனாத் தடுப்பு தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

இதன்படி, ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் நகரிலிருந்து, 50 பேரும் அவுஸ்திரேலியாவிருந்து 191 பேரும், ஜப்பானில் இருந்து 12 பேரும் இத்தாலியில் இருந்து 75 பேரும் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்த அனைவரும் முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# நிறுவன ஊழியர்களுக்கு போக்குவரத்து சேவை

(கொழும்பு)

நிறுவன ஊழியர்களுக்கு போக்குவரத்து சேவையை வழங்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்காக தற்போது சுமார் 150 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த சேவைக்காக 20 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த பேருந்து சேவையானது, நவம் மாவத்தை முதல் கண்டி வீதி, காலி வீதி, ஹைலெவல் மார்க்கம், லோ லெவல் மார்க்கம் மற்றும் சிலாபம் வீதி ஆகியவற்றின் ஊடாக பயணிக்க உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# பிரபாகரனின் பிறந்தநாளை பிரான்ஸில் கொண்டாடிய தமிழர்



(பரிஸ்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 66 பிறந்த தினத்தை உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் கொண்டாடியுள்ளனர்.

அந்த வகையில் இந்தியா, லண்டன், சுவிஸ் போன்ற பல நாடுகளில் கோலாகலமாக கொண்டாடப்பட்டன.

இந்த வரிசையில் ஐரோப்பிய நாடான பிரான்ஸில் பரிஸ், லாச்சப்பல் பகுதியில் கொரோனா அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது தமிழர்கள் ஒன்றுசேர்ந்து மேடை போட்டு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தை கோலாகலமாக கொண்டாடியுள்ளனர். (நி-7-4)



# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 222

## கொரோனாவை எதிர்கொள்ள தயார்படுத்தல் அவசியம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எப்போதுமே எதிர்பாராத நோயினாலான இடரின் பிடிக்குள் தற்போது நாம் அனைவரும் சிக்கியிருக்கின்றோம். கொரோனா வைரஸ் தொற்று தலையெடுப்பது எதிர்பாராதளவுக்கு அலை அலையாக வர விருக்கின்றது என்பதனை நாம் தற்போது புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எப்போது எழும், எப்போது மறையும் என எவராலேயும் தீர்மானிக்க முடியாதளவுக்கு அது ஆங்காங்கே வீரியமாக எழுகின்றது. அதனையும் தாண்டி தற்போது மழை கால மாகையால் இன்னும் இந்த வைரஸின் தாக்கத்தினுள் சிறைப்பட வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன. உணவு மூவேளையும் ஒரு குடும்பத்திற்கு அவசியமாக இருக்கின்ற போது நாம் எவ்வாறு உணவினை பெற்றுக் கொள்ளப் போகின்றோம் என்பதனை கொஞ்சமாவது நாம் திட்டமிடல் வேண்டும்.

### அசைவு மட்டுப் படுத்தியாக வேண்டும்

ஏனென்றால் நாம் விரும்பிய இடங்களுக்கு நினைத்த நேரத்தில் சென்றுவருவது இன்னும் பிரச்சினையாக வர விருக்கின்றது என்பதனை நாம் தற்போது உணரத்தலைப் பட்டிருக்கின்றோம். நோய்த் தொற்று உடையவர்கள் எந்த நேரத்தில் எப்போது வருகின்றார்கள் என்பதனை நாம் கண்டறிய முடியாது.

ஏனென்றால் அவர்கள் எமது உறவுகளாகவே இருக்கப் போகின்றார்கள். அதனால் எவராவது வெளியில் சென்று வரும் போது சுகாதார நடைமுறைகளை அவசியம் முழுமையாக கடைப்பிடிக்கத் தவறக்கூடாது. கவனயீனம், அசட்டையாயிருத்தல் உயிர்களைப் பறிக்கும் அளவுக்கு சென்றுவிடும் என்பதனை எவரும் மறக்கக் கூடாது.

எங்கிருந்தோ அலட்சியத்தின் போக்கினால் வெளிக்கிளம்பியது தற்போது அவரவர் வீடுகளில் அனைவரையும் முடக்கும் அளவுக்கு வீரியம் பெற்றிருக்கின்றது. குறிப்பாக முதியவர்கள் இருக்கின்ற வீடுகளில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

எமது வீட்டிலேயே உணவினைப் பெறக்கூடியவாறு நாம் எம்மையும் எமக்கான நிலப்பரப்பையும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். மருத்துவத்துறையின் ஆலோசனைகளையும் அவர்களது அறிவுரைகளையும் நாம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை நினைவில் கொள்க.

ஆனாலும் காலம் கடந்து போகும் போது நிகழ்வுகளை தொடர்ந்து பின்னுக்கு போட முடியாது. இருப்பினும் எமது குடும்பத்தினதும் ஒவ்வொரு உறுப்பினர்களதும் சுகாதாரத்தை கவனத்திற் கொண்டால் நாம் இன்னும் அவதானமாக இருக்க வேண்டும் என்பது புரிகின்றதல்லவா.

### சமூகப் புரிந்துணர்வு அவசியம்

பாதிப்பில் சிக்கியிருக்கும் அனைவரையும் பாதுகாப்பாக நோய்த்தொற்று மற்றையவர்களுக்கு ஏற்படாதவாறு தனிமைப்படுத்தல் வேண்டும். எமது பாரம்பரிய உணவின் பால் தற்போது பலருக்கும் விருப்பம் வந்துள்ளமையானது அதனது பெருமையை பறைசாற்றும் கருவியாக மாறிவிடும்.

சமூகத்தினுள்ளே இத்தொற்று வந்துவிட்டதாக பல செய்திகள் வந்தாலும் இன்னும் அதனை முழுமையாக முடிவு செய்ய முடியவில்லை. மாறாக இவ்வாறான தொற்று கிராமப்புறங்களில் வருமாயின் அதற்கான தடுப்புச்சுவர்கள் இலகுவாகக் கிடைக்கும்.

அவரவர் குடும்பங்கள் உள்ளடங்கிய கிராமங்களுக்குள் இவ்வாறான தொற்று உள்வராமல் நாமனைவரும் முயற்சி செய்தல் வேண்டும். கிராமங்களுக்குள் உள்வரவில்லையென்றால் அங்கேயுள்ள வேலை வாய்ப்பு எந்தக் காரணங் கொண்டும் பாதிக்கப்படாது.

ஆகையால் நாமே எமது பிரதேசத்தை தனிமைப்படுத்தி அதற்குள் வாழும் மக்களை எந்தத் தொற்றும் வராது காப்பாற்றிக் கொள்ளலாம். அன்றாடம் தினக்கூலிகளாக அவர்களது தொழிலை அந்த கிராமத்திலேயே தொடர்ந்து செய்யவும் அதன்மூலம் வருவாயை ஈட்டவும் வழிகிடைக்கும். தினந்தினம் வேலைசெய்யும் மக்களுக்கான உணவும் அவர்களது ஊதியமும் தடங்கலின்றி கிடைக்கச் செய்தல் அவசியமாகும்.

வறுமைக்கோட்டில் அல்லல்படும் மக்களுக்கான உணவுத் தேவை முன்கூட்டியே கிடைக்கச் செய்தல் வேண்டும்.

### முன்கூட்டிய தயார் படுத்தல் அவசியம்

ஆரம்பத்தில் கொரோனா தாக்கம் வந்தபோது நம் எந்த வித தயார்படுத்தலுக்கும் உள்ளாகவில்லை. அதனால் முண்டியடித்துக் கொண்டு உணவுகளை பதுக்க ஆரம்பித்து பின்னர் அதனிலிருந்து வெளிவர வழிகிடைத்தபோது பலரது உணவுப்பொருட்கள் காலவரையறையைக் கடந்து அவை வீணாகிவிட்டதனை காண முடிந்தது. உணவு தட்டுப்பாடாக வரும்போது தேவைப்படுபவர்களுக்கு கொடுக்காமல் உணவுப் பொருட்களை வீணாக்குவது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

தேவைக்கேற்ப உணவினை நாம் சேமித்து வைத்தல் சமூகத்திற்கு செய்யும் கைங்கரியமாகும். எக்காலத்திலும் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு வராது பார்க்கும் அதே நேரத்தில் உணவின்றி தவிக்கும் மக்களுக்கு குறைந்தளவாவது கிடைக்க வழிசெய்தல் அவசியம்.

மற்றைய இடர் காலங்களின் போது தொண்டர்கள் விரைந்து சென்று அவர்களுக்கு வேண்டிய உதவியை நல்கியதை இதில் பதிவு செய்வதோடு அந்த நல்லுள்ளங்களை பாராட்டவும் வேண்டும்.

ஆனால் தற்போதைய நெருக்கடியென்பது அவற்றையும் தாண்டி நாம் நினைத்த மாத்திரத்தில் உதவி தேவைப்படுவோருக்கு நாமாக சென்று கொடுக்க முடியாத நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது.

மருத்துவ நடைமுறைகளை முழுமையாகச் செவிமடுத்து நாம் செயற்படவேண்டிய காலமாதலால் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டால் அனைவரையும் காவுகொள்வதிலிருந்து நாம் காப்பாற்றிக் கொள்ளலாம். அனைத்துக்கும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

### அவசியமற்ற உணவுப் பதுக்கலை தவிர்க்கலாம்

தேவையற்ற அளவில் தேவைக்கதிகமாக பழுதடையும் உணவுப்பொருட்களை சேமிக்காதீர். அத்துடன் பாரம்பரிய உணவுகளாக நாம் பயன்படுத்தும் அனைத்தையும் உணவில் சேர்த்துக் கொண்டால் எமக்கான உணவுக்கு எப்போதும் பஞ்சம் வராது. ஆபிரிக்க நாடுகளில் உணவுப்பஞ்சம், வறுமை தலைவிரித்தாடுகின்றது. ஊட்டச்சத்தின்றி மழலைகள், பெண்கள் நலிந்த உயிரை தக்க வைக்கும் காட்சிகள் மனதை உறுத்துகின்றன.

எமக்கும் இவ்வாறான நிலை வந்துவிடுமோ என அங்கலாய்க்கின்றனர். நிலைமை மோசமானால் நாம் பொறுப்பற்று சமூகத்தில கவனமற்று நடந்து கொண்டால் எவ்வழியிலும் இத்தொற்று எம்மை அண்டிவிடும். அவசியம் நாம் கவனமாக ஒவ்வொரு செயலையும் செய்யவேண்டும்.

### வீட்டில் உணவை உற்பத்தி செய்ய முனைவோம்

எமது உணவை நாம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை அதிகம் கவனமெடுத்து செய்தல் நன்று. உணவுற்பத்திக்கான அதிகம் செலவு செய்யாமல் இருக்கின்ற இடவசதியைப் பொறுத்து நாம் பயிர்களை வளர்க்கலாம். அவற்றிலிருந்து கிடைக்கும் காய், கனி, இலை, பூ, வேர், கிழங்கு என எதனையும் நாம் உணவாக பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். எமது உணவுப் பழக்கத்தில் மாற்றத்தைக் அவசியம் கொண்டுவருதல் வேண்டும்.

பல்வகை தாவரங்களை வளர்க்கும் போது எமக்கான உணவினை நாம் இனங் கண்டு கொள்ளலாம். உணவினை மாற்றிப்பாருங்கள். அதிலே எங்களுக்கான சுவாத்தியமும் தேகாரோக்கியமும் உள்ளார்ந்திருக்கின்றது.

நாம்பாரம்பரியமாக உண்டு வாழ்ந்த உணவுகள் தற்போது அருகத் தொடங்கியிருக்கின்றன. அவற்றை மீண்டும் இளையவர்களுக்கு சொல்லிக் கொடுத்து அவற்றின் பயன்களை பலரும் அறிய வைத்தல் அவசியமாகும்.

எமக்கெல்லாம் தெரியும் என்னும் வியாக்கியானங்களை விடுத்து மருத்துவ உலகம் தரும் அறிவுறுத்தல்களை அவசியம் கவனித்து கடைப்பிடிக்க வேண்டும். உணவிலும் நாம் பல்வகைத் தன்மையை காணலாம்.

அதிகம் பயன்படாத மூலிகைத் தாவரங்களை உணவாக்க முடியுமாயின் அவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்க உதவும் இது மாற்றத்திற்கான காலம்.

இந்த வருடம் முடிந்து அடுத்த வருடத்திலும் இந்தப் பிரச்சினை இருக்கப் போகின்றது என்பதனால் எமது தயார்படுத்தல்கள் முன்கூட்டியே இருப்பது என்றும் எம்மை எந்தப் பிரச்சினையிலிருந்தும் காப்பாற்றும் என நம்புவோமாக.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 305



# தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதே இலக்கு

## அரசு கூறுகிறது

**(கொழும்பு)**

**சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டம் முழுமையாக செயற்படுத்தப்படுகிறது. இறக்குமதி பொருளாதாரத்தில் தங்கியிருக்க வேண்டிய தேவை கிடையாது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்கு என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும். சிறந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளன.

பூகோள மட்டத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. நெருக்கடியான நிலையில் எவரையும் குற்றஞ்சாட்ட முடியாது.

நெருக்கடி நிலையினை அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து வெற்றிகொள்ள வேண்டும். சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன் என்றும் இணக்கமாக செயற்படும்.


அரசாங்கம் ஆட்சியமைத்த வேளையில் இருந்து பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. கொவிட்-19 வைரஸ் தாக்கம் அனைத்து துறைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டம் முழுமையாக தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்கு.

கடந்த அரசாங்கம் இறக்குமதி பொருளாதாரத்தில் தங்கியிருந்ததால் தேசிய உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன. இந்நிலைமை தற்போது முழுமையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்கு. 2024 ஆம் ஆண்டுக்குள் 10 தானியங்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டு உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் என தெரிவித்தார். (ஜ-4)

# மட்டக்களப்பில் கோர விபத்து இருவர் படுகாயம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில்வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்று அதிகாலை இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற பாரிய விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மரம் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த லொறியும், பொருட்கள் ஏற்றி வந்துகொண்டிருந்த கன்டெய்னர் லொறியும் நேருக்கு நேர் மோதி மின்சார தூணில் மோதியுள்ளது.

இதன்போது இரண்டு லொறியும் பாரிய சேதமடைந்துள்ள போதிலும் இரண்டு லொறியிலும் பயணித்தவர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

இதன்போது இரண்டு பேர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

## எதியோப்பியாவில் யுத்த பகுதிகளில் சிக்கியுள்ள இலங்கையர்கள் மீட்பு

(எதியோப்பியா)

எதியோப்பியாவில் யுத்த பகுதிகளில் சிக்கியிருந்த 38 இலங்கையர்கள் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த 38 இலங்கையர்களும் ஐக்கிய நாடுகளின் உதவிகளுடன் மீட்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேலும், மீட்கப்பட்ட இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதியோப்பிய பிரதமர் அபி அகமது பிராந்திய அரசாங்கத்திற்கு எதிராக தாக்குதலைத் தொடங்கியதை அடுத்து நவம்பர் 4 முதல் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## மொரார்ஜி தேசாய்!

**1944 ஆம் வருடத்திலே ஒரு நாள்.**

**மொரார்ஜி தேசாய் எரவாடா சிறையிலே இருந்தார்.**

**பொலிஸ் உயர் அதிகாரி ஒருத்தர் வந்தார். மொரார்ஜி தேசாயை சிறை அதிகாரி அலுவலகத்துக்கு அழைத்துப் போனார்.**

**சிறை அதிகாரி ஒரு தகவலைச் சொன்னார்.**

**உங்கள் நண்பர் மங்கள்தாஸ்பக்வாசா என்கிறவர் நாசிக் சிறை யிலே அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு உடல் நலம் ரொம்ப பாதிக்கப்பட்டதாலே அவரை சிறையிலிருந்து மும்பையில் உள்ள ஹரிகிசன்தாஸ் மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். அவர் உங்களைப் பார்க்க ரொம்ப ஆவலாக இருக்கிறார். அதனாலே நீங்கள் பரோலில் போய் பார்த்துவிட்டு வாருங்கள் என்றார்.**

**அதாவது நிபந்தனையோடு போய் பார்த்துவிட்டு வரலாம் என்றார்.**

**தியாகச் செம்மல்கள் பரோலில் செல்வதில்லை. அப்படி என்ற உறுதியோடு தான் சிறைக்கு வருவார்கள்.**

**அப்படி இருக்கும்போது மொரார்ஜி மட்டும் பரோலில் போய் வர எப்படி சம்மதிப்பார்.**

**உயிர் நண்பனின் உயிர் ஊசலாடுவதைக் கேட்டதும் உடனே போய் பார்க்கனும் என்ற ஆவல்தான்.**

**இருந்தாலும் வரன்முறையை மீறிப்போய் பார்ப்பதென்றால் அது தேச பக்தியை அவமானப்படுத்துவது மாதிரி ஆகும் என்பதை அவர் உணர்ந்தார்.**

**அதனால் தான் பரோலில் போவதற்கு நான் தயாராக இல்லை என்றார்.**

**நண்பனுடைய கடைசி ஆசையை நிறைவேற்றுவது உங்கள் கடமை இல்லையா? என்றார் சிறை அதிகாரி.**

**கடமைதான். அதே சமயம் எனது கடமையை காப்பாற்றுவதும் முக்கியமாச்சே என்றார் அவர்.**

**அதற்குப் பிறகு அந்த அதிகாரி நிபந்தனை இல்லாமலே மொரார்ஜியை வெளியே அனுப்ப சம்மதித்தார்.அப்படி இருந்தும் மற்ற நண்பர்களை கலந்தாலோசித்துவிட்டு மொரார்ஜி வெளியே புறப்பட்டார்.**

**மும்பைக்குப் போனார். படுக்கையில் இருந்த நண்பரை சந்தித்தார். அவர் மிகவும் மோசமான நிலையிலே இருந்தார். உடல் நிலை கவலைக்கிடம் என்றுதான் வைத்தியர்களும் சொன்னார்கள்.**

**மங்கள்தாஸ் இனி எனக்கு வாழ்க்கையிலே என்ன இருக்கு நான் இறந்து விடுவதே மேல் என்றார்.**

**மொரார்ஜிக்கு ரொம்ப வருத்தமாகி விட்டது.**

**மங்கள்தாஸ் இல்லத்திலே இருந்த சமயத்தில் தான் மொரார்ஜியை கைது செய்தார்களாம். அந்த அதிர்ச்சி தான் மங்கள்தாஸை ரொம்ப பாதித்து இருக்கிறது என்பதை புரிந்து கொண்டார்.**

**இதோ பாருங்க. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்வதும் சிறையில் அடைப்பதும் சகஜம்தானே. அன்று உங்கள் வீட்டில் இருந்தபோது நான் கைது செய்யப்படவில்லை என்றாலும் இன்னொரு இடத்திலே நான் கைது செய்யப்பட்டுத் தான் இருப்பேன். அதனாலே நீங்கள் ஏன் வேதனைப்படனும். நீங்கள் தைரியமாக, உறுதியாக இருக்க வேண்டும் என்றார் மொரார்ஜி தேசாய்.**

**அது மட்டும் இல்லை. அது வரைக்கும் மருந்து சாப்பிடாம இருந்த மங்கள்தாஸை மருந்து சாப்பிட வைத்தார்.**

**இரண்டு நாட்கள் அவர் பக்கத்திலே தான் இருந்தார். அதற்குப் பின் டாக்டரைப் பார்த்து மங்கள்தாஸின் உடல் நிலை பற்றி பெரிய விசாரித்தார்.**

**இப்போது பரவாயில்லை தேறியிருக்கிறார்.எப்படி இருந்தாலும் இன்னும் ஆறு மாதங்கள் தான் அவர் உயிரோடு இருப்பார்.**

**அப்படி என்று சொல்லிவிட்டார் வைத்தியர்.ஆனால் அதற்குப் பின் நடந்தது என்ன தெரியுமா? மங்களதாஸ் அதற்குப் பிறகும் 25 வருடம் நலமாக இருந்தார். இவர் ஆறு மாதங்கள் தான் இருப்பார் என்று சொன்ன வைத்தியர் ஆறு மாதத்திலே ஒரு எதிர்பாராத விபத்தில் சிக்கி இறந்து போனார். ஆறு மாதம் வைத்தியர் சொன்ன கணக்கு சரிதான். ஆனால் இடம் தான் மாறிப் போச்சு!**

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?



06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**பாராளுமன்றம் மற்றும் சபாநாயகரின் வைபவ ரீதியான நிகழ்வுகள்/ செயற்பாடுகள் ஆகியவற்றை பொருத்தமான தராதரத்துக்கு அமைய ஒழுங்கு செய்தல். சபாநாயகருக்கான உத்தியோகபூர்வ ஆடையணி / உத்தியோகபூர்வ இலச்சினை/உத்தியோகபூர்வ கொடி மற்றும் உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளை வழங்குதல் போன்றவை படைக்கலச் சேவிதரின் பணிகளாகும்**

● சபாநாயகருக்கான உத்தியோகபூர்வ ஆடையணி /உத்தியோகபூர்வ இலச்சினை/ உத்தியோகபூர்வ கொடி மற்றும் உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளை வழங்குதல்.

● சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் விருந்தினர்களை (மிக மிக முக்கியமான ஆட்கள், மிக முக்கியமான ஆட்கள் ஆகியோரை) வரவேற்றல்.

● அமரத்துவம் அடைந்த ஜனாதிபதிகள் மற்றும் பிரதம அமைச்சர்கள் ஆகியோரின் உருவப்படங்களை திரை நீக்கம் செய்தல் உட்பட பாராளுமன்றத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உருவப்படங்களை காட்சிப்படுத்துவதுடன் அது தொடரபுடைய வேலை.

● பாராளுமன்றத்தில் தேசிய/ மத வைபவங்கள் தொடர்பான வேலைகளை நடத்தி வைத்தல்.

● பாராளுமன்றத்தால் ஒழுங்கு செய்யப்படும் மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றின் வைபவ ரீதியான தொழிற்பாடுகளை நடத்துதல் ஆகியவற்றை படைக்கலச் சேவிதரின் வைபவரீதியான பொறுப்புக்களாக குறிப்பிடலாம்.

**சபாகூடம் சம்பந்தமான படைக்கலச் சேவிதரின் பொறுப்பு**

● பாராளுமன்றத்தின் அதிகாரத் தத்துவத்தை எடுத்தியம்புகின்ற "செங்கோலின்" பொறுப்பாளராகவும் பாதுகாவலனாகவும் விளங்குதல்.

● சபையின் நிறைவேற்று அதிகாரம் மிக்கவர் என்ற ரீதியில் சபாநாயகர் படைக்கலச் சேவிதரை நிறைவேற்றுமாறு பணிக்கின்ற பணிகளை நிறைவேற்றுதல்.

● பாராளுமன்ற சபையும் குழுக்களும் வினைத்திறனுடன் செயற்படுவதை மேம்படுத்துவதற்கு அவசியமான பணியாளர்களும் வசதிகளும் இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் சட்டவாக்க செயன்முறைக்கு உயர் தரத்திலானதும் நேரடியானதுமான உதவியினை வழங்குதல். ஆகியவற்றை படைக்கலச் சேவிதரின் சபாகூடம் சம்பந்தமான பொறுப்புக்களாக குறிப்பிடலாம்.

**பாதுகாப்பு சம்பந்தமான படைக்கலச் சேவிதரின் பொறுப்பு**

● பாராளுமன்றத்தில் பணியாற்றுபவர்களுக்கும் பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு விஜயம் செய்பவர்களுக்கும் வன்முறை, விபத்து மற்றும் தீ அபாயங்களை முகாமைத்துவம் செய்தலை மற்றும் இழிவளவாக்குதலை உறுதிப்படுத்துவதன் மூலம் பாராளுமன்றக் கட்டடத்தொகுதி முழுவதும் பாதுகாப்பானதும் பத்திரமானதுமான சூழல் மற்றும் உட்கட்டமைப்பை வழங்குதல்.

● பாராளுமன்ற பொலிஸ் பிரிவுடன் இணைந்து பாராளுமன்றம் மற்றும் அதன் வளவெல்லையின் பௌதீக பாதுகாப்பை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்கதுமாகப் பேணுதலும் பாராளுமன்ற வளவெல்லையினுள் உறுப்பினர்கள், பணியாள் தொகுதியினர் மற்றும் விஜயம் செய்வோர் ஆகியோருக்கான பாதுகாப்பு தொடர்பாக சபாநாயகருக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கும் பயனுள்ள ஆலோசனையை வழங்குதலும்.

● பாராளுமன்ற வளவினுள் ஒழுங்கினைப் பேணுதல்.

● பாராளுமன்ற கட்டடத் தொகுதியின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குச் சுற்றி கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு பாதுகாப்பு அனுமதியினை வழங்குவதற்கு பொருத்தமான பாதுகாப்பு பரிசீலனைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துதல்.

● பாராளுமன்றப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளருடன் இணைந்து பின்வருவன உள்ளிட்ட பாராளுமன்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை கூட்டாக நிர்வகித்தல்.

● அணுகல் கட்டுப்பாடு

● பாதுகாப்புப் பரிசீலனை

● பதில் நடவடிக்கை ஆற்றலைப் பேணுதல்

● தொழில்நுட்ப பாதுகாப்பு

● முப்படைகளுடனும் பொலிஸாருடனும் புலனாய்வு முகவர்களுடனும் இணைந்து பணியாற்றுதல்.

● விசேடமாக்கப்பட்டுள்ள வளங்களை ஒருங்கிணைத்தல்

● வெளிநாட்டு அதிதிகள் சம்பந்தப்படும் பிரதான நிகழ்வுகளைத் திட்டமிடல் மற்றும்

● விசேட வகை அச்சுறுத்தல்கள் பற்றித் திட்டமிடுதல்.

போன்றவற்றை படைக்கலச் சேவிதரின் பாதுகாப்பு சம்பந்தமான பொறுப்புக்களாக குறிப்பிடலாம்.

**விஜயம் செய்பவர்களை நிர்வகித்தல் சம்பந்தமான படைக்கலச் சேவிதரின் பொறுப்பு**

● பாராளுமன்ற கட்டடத்தொகுதியினுள் நபர்களை அனுமதிப்பதை கட்டுப்படுத்துவதும் ஒழுங்குபடுத்துவதும்.

● பாராளுமன்றத்தை பார்வையிட வரும் பாடசாலைகள் மற்றும் விஜயம் செய்வோருக்கு வசதியளித்தல்.

**பாராளுமன்றத்தில் இட வசதி சம்பந்தமான படைக்கலச் சேவிதரின் பொறுப்பு**

● பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதில் பணியாற்றும் அனைவருக்கும் பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்பவர்களுக்கும் தரமான சூழல் மற்றும் உட்கட்டமைப்பினை வழங்குவதன் மூலம் பணியாற்றுவதற்கும் விஜயம் செய்வதற்கும் பாராளுமன்றக் கட்டடத்தொகுதி ஒரு சிறந்த இடம் என்பதை உறுதிப்படுத்துதல்.

● குழு மற்றும் நேர்காணல் அறைகள் உள்ளடங்கலாக பாராளுமன்றக் கட்டடம் முழுவதும் இட வசதிகளை ஒதுக்குவது தொடர்பாக ஆலோசனை வழங்குவதும் அதனை நிர்வகித்தலும்.

● அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் போன்றவர்களுக்கு அறைகளை ஒதுக்குதல்.

● பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் திணைக்களத்தின் சீருடை அணியும் பணித் தொகுதியினருக்குமாக பூட்டுப்பெட்டிகளை (lockers)/ சிற்றலுமாரிகளை (Cupboards) ஒதுக்குதல்.

**படைக்கலச் சேவிதரினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள்**

● அரச உத்தியோகத்தர்கள் அறைக்கான அனுமதிப்பத்திரங்கள்,

● அரச உத்தியோகத்தர்களின் (நுழைவு) அனுமதிப்பத்திரங்கள்,

● அமைச்சரவை அமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்கள் மற்றும் பிரதம செயலாளர் உத்தியோகத்தர்களுக்கான (நுழைவு) அனுமதிப்பத்திரங்கள், உணவு அறை அனுமதிப் பத்திரங்கள்

● ஏனைய பணியாள் தொகுதியினர் / தற்காலிக பணியாள் தொகுதி வழங்குநர்கள் ஆகியோரின் தற்காலிக (நுழைவு) அனுமதிப்பத்திரங்கள்

● பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் பணியாற்றும் பணியாள் ளெதாகுதியினருக்கான வாகன நுழைவு அனுமதிப்பத்திரங்கள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட வகைகளுக்கான வாகன நுழைவு அனுமதிப்பத்திரங்கள்.

● உறுப்பினர்களின் வாகனங்களைச் செலுத்துவோருக்கான நுழைவு அனுமதிப்பத்திரங்கள்.

● ஊடக அறிக்கையாளர்கள் மற்றும் ஊடக செய்தியாளர்களுக்கான நுழைவு அனுமதிப்பத்திரங்கள்.

● அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வருகை தருபவர்களுக்கான வர்ண தற்காலிக நுழைவு அனுமதிப்பத்திரங்கள் (தள/பகுதி வாரியாக)

● அமர்வு தினங்கள் தொடர்பில் பொதுமக்கள் கலரிக்கான (நுழைவு) அனுமதிப்பத்திரங்கள் மிக முக்கிய ஆட்களுக்கான கலரி (நுழைவு) அனுமதிப்பத்திரங்கள்

● பாராளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொள்வதற்கான பாடசாலைகளுக்கான அனுமதிக் கடிதங்கள்.

● பல்வேறுபட்ட அமைச்சுகள், திணைக்களங்களின் விரைதூதுவர்களுக்கான (dispatch riders) அனுமதிக்கடிதங்கள். நுழைவு அனுமதிப்பத்திரங்கள்.

● செல்லிடத்தொலைபேசி, மின்னியல் /இலத்திரனியல் கருவிகள் மற்றும் ஊடக உபகரணங்கள் என்பவற்றுக்கான (எடுத்துச் செல்லல்) அனுமதிப்பத்திரங்கள்.

● விடுமுறை தினங்கள் உட்பட வேலை நேரம் அல்லாத வேளைகளில் வேலை செய்வதற்கான அனுமதிக் கடிதங்கள்.

● பாராளுமன்ற/ஏனைய பணியாள் தொகுதி உத்தியோகத்தர்களின் அறைக்கான அனுமதிப்பத்திரங்கள்.

● சபை / முகப்புக்கூட அனுமதிப் பத்திரங்கள்

**படைக்கலச் சேவிதர் அலுவலகம் பின்வருவோருக்கு பாராளுமன்ற அடையாள அட்டைகளை வழங்குகின்றது.**

● பாராளுமன்ற உறுப்பினர்கள்.

● முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

● பாராளுமன்ற கௌரவ உத்தியோகத்தர்கள்.

● பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாள் தொகுதி உறுப்பினர்கள்.

● பாராளுமன்றத்தின் ஏனைய பணியாள் தொகுதியினர். (தொடரும்...)

# போதைப்பொருளுடன் சிக்கிய மீனவப்படகு

**(கொழும்பு)**

**சர்வதேச கடலில் போதைப்பொருளினைப் பெற்றுக்கொண்டு இலங்கை நோக்கி வரும் போது 6 இலங்கையர்கள் படகுடன் கைது செய்யப்பட்டனர்.**




'ஷெனாயா துவ' எனும் இந்த மீனவ படகில் இருந்து ஹெரோயின் போதைப் பொருட்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 110 கிலோ ஹெரோயினும் 6 துப்பாக்கிகளும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

பி.என்.பீ.எனப்படும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இந்த விடயம் குறித்து உள்நாட்டில் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் அண்மையில் தெற்கில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் தெற்கில் மீட்கப்பட்ட 100 கிலோ ஹெரோயினும் இதே போல் கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ள நிலையில், இந்த மீன்பிடிப் படகு தொடர்பிலும் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## பூஜை செய்வது எப்படி?

கடவுளுக்கு பதினாறு விதமான உபசார பூஜைகள் செய்ய வேண்டும். இதற்கு சோடச உபசாரம் என்று பெயர். சோடசம் என்றால் பதினாறு என்று அர்த்தம் ஆகும். உலகில் உள்ள எல்லா ஆன்மாக்களும் இன்பமாக வாழ்ந்து இறுதியில் முக்தி பெற வேண்டும் என்ற அடிப்படையில் ஆகம விதிகளின்படி சோடச உபசார பூஜைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆதிசங்கரர் இந்த பூஜை முறைகளை எளிமைப்படுத்தினார்.

மிகவும் பழைமையான ஆலயங்களில் சோடச உபசார பூஜைகள் மிகவும் விரிவாக, அழகாக நடத்தப்படுகிறது. அந்த பதினாறு வகை பூஜைகள் வருமாறு:-

1.ஆவாகனம், 2.ஸ்தாபனம், 3.சந்நிதானம், 4.சந்நிரோதனம், 5.அவகுண்டனம், 6.அபிஷேகம், 7.பாத்தியம், 8.ஆசமனீயம், 9.அர்க்கியம், 10.புஷ்பதானம், 11.தூபம், 12.தீபம், 13.நைவேத்தியம், 14.பானீயம், 15.ஜெபசமர்ப்பணம், 16.ஆரத்தி.

சில ஆலயங்களில் ஆவாகனம் முதல் புஷ்பதானம் வரை பத்து வித பூஜைகளை மட்டுமே செய்வார்கள். இதற்கு தச உபசாரம் என்று பெயர். சில இடங்களில் நீர்சாரம், ஜலீயோ உபசாரம், தைஜசோ உபசாரம், வாயவீயோ உபசாரம், நாதசோ உபசாரம், பஞ்ச உபசாரம் என்றெல்லாம் பூஜைகள் நடத்தப்படுவதுண்டு.

ஆனால் சோடச உபசார பூஜையே மிகவும் சிறப்புடையது. முழுமையானதும் கூட. இந்த பூஜைகளை தொடங்கும் முன்பு பூஜை செய்பவர் தன் உடம்பை சுத்தப்படுத்தும் ஆத்மசுத்தி, கருவறையை சுத்தப்படுத்தும் ஸ்தான சுத்தி, பூஜை பாத்திரங்களை சுத்தப்படுத்தும் திரவிய சுத்தி, அந்தந்த மூர்த்திக்குரிய மூலமந்திரத்தை ஜெபிக்கும் மந்திர சுத்தி, விக்கிரகத்தை சுத்தப்படுத்தும் லிங்க சுத்தி ஆகியவற்றை செய்ய வேண்டும். அதன்பிறகே சோடச உபசார பூஜையைத் தொடங்க வேண்டும்.

**1.ஆவாகனம்:**

இறைவனை வரவழைத்து விக்கிரகத்தில் எழுந்தருள செய்வதே ஆவாகனம் எனப்படும். ஜீவ சைதன்யத்தை மூலாதாரத்தில் இருந்து சுஷூம்னா வழியாக மேலே ஏற்றுவதாக பாவித்து சங்கல்பம் செய்ய வேண்டும்.

**2.ஸ்தாபனம்:**

இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்திப்பது ஸ்தாபனம் ஆகும்.

**3.சந்நிதானம்:**

நாம் பூஜிக்கும் மூர்த்தி, நமக்கு அனுக்கிரகம் செய்வதற்காக நடத்தப்படும் பூஜைக்கு சந்நிதானம் என்று பெயர். இந்த பூஜையால் சிவத்தின் அருள் சுரந்து நம்மிடம் நிறைந்து நிற்கும்.

**4.சந்நிரோதனம்:**

இறைவா என்னிடம் என்றும் கருணையோடு இருக்க வேண்டும் என்று மனம் உருகி பிரார்த்தனை செய்வதற்கு சந்நிரோதனம் என்று பெயர்.

**5.அவகுண்டனம்:**

கருவறை மூலவர் விக்கிரகத்தை சுற்றி கவச மந்திரத்தால் மூன்று கவசம் உண்டாக்க வேண்டும். மூலவர் பூஜைக்கு தடைகள் வராமல் மந்திரத்தால் அதனை மூட வேண்டும். இதற்காக ஆகம விதிப்படி சோடிகா முத்திரை, காளசண்ய முத்திரை ஆகிய முத்திரைகளை பூஜை செய்பவர்கள் செய்தல் வேண்டும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 84 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டிற்காக நேற்று முன்தினம் 84 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர் 30 முதல் நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் மொத்தமாக 744 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஜ-4)

## வீட்டு தனிமைப்படுத்தலுக்காக கண்காணிப்புப்பொறிமுறை

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றுறுதியானவர்களுடன் தொடர்புடையவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் தனிமைப்படுத்தல் நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய கண்காணிப்புப் பொறிமுறை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கண்காணிப்புப் பொறிமுறை கட்டமைப்பு மற்றும் பொறுப்புகள் குறித்து அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண தலைமை செயலாளர்கள், மாகாண சுகாதார செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் ஜனாதிபதியின் கீழ்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. (ஜ-4)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 120 | 280 | 200 |
| தக்காளி | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 30 | 50 | 70 | 80 |
| கரட் | 120 | 180 | 200 | 200 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 80 | 120 | 70 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280-320 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 400 | 200 | 280 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 280 | 400 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 160 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 240 | 200 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 60-70 | 60 |
| தேசிக்காய் | 200 | 180 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 300 | 220 | 300 |
| வெங்காயப்பூ | — | 300 | — | — |
| முள்ளங்கி | 60 | 70 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | — | 120 |



# சிறுவர் அரங்கம்

## அன்னையின் வளர்ப்பு



**நோ**பல் பரிசு பெற்ற ஒரு விஞ்ஞானி இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினார்.

ஆனால் எந்த வேலையையும் ஒருமைப்பாட்டுடன் செய்யவில்லை. அவரின் போக்கை கண்ட அவரின் தாயார் மிகவும் வருந்தினார்.

ஒருநாள் அவரை அழைத்து பூதக்கண்ணாடியையும் சில காகிதங்களையும் கொண்டுவரச் சொல்லி, காகி தங்களை கீழே போட்டு கண்ணாடியை வெயிலில் காட்டினார்.

பூதக்கண்ணாடியை பிடித்த தாயின் கைகள் இங்கும் அங்குமாய் அசைந்து கொண்டிருந்தது.

நீண்ட நேரத்திற்கு பிறகு தனது கைகளை பூதக் கண்ணாடியின் ஒளிக்குவியல் காகிதத்தின் மேல்படுமாறு நீட்டினார்.

ஒளியின் ஒரு முனையில் தீ காகித்தை எரித்தது. இதை கவனத்துடன் பார்த்த இந்த விஞ்ஞானி ஆச்சரியப்பட்டார்.

அப்போது தாயார் கூறினார், ஒருமுகப்படுத்திய ஒளிக்கதிர்கள் நெருப்பாகி காகிதத்தை எரிக்கும். ஆனால் ஒருமுகப்படுத்தாத கதிரின் ஒளியில் நெருப்பு உண்டாகாது.

அதுபோல் நீயும் உள்ளத்தை ஒருமுகப்படுத்தினால் எந்த வேளையிலும் வெற்றி அடையலாம் என தயார் அவருக்கு அறிவுரை கூறினார்.

இந்த விஞ்ஞானி தனது மனதில் தாயாரின் வார்த்தைகளை வைத்துக்கொண்டார்.

அன்று முதல் மன ஒருமைப்பாட்டுடன் தனது செயல்களை செய்ய தொடங்கினார். பிற்காலத்தில் உலகமே போற்றும் சேர். சி.வி. இராமன் ஆனார்.

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### மாண்புமிகு மாசிடோனியா




அடுத்து கொஞ்சம் பொறுங்கள். அலெக்சாண்டர் நிறைய போர்களுக்குச் செல்லவிருக்கிறார்.

குளம்படிச் சத்தங்களும் வாள் ஓசைகளும் கோடரிகளின் கொக்கரிப்புக்களும் நிறையவே இருக்கின்றன.

அதற்கு முன் கிரேக்கத்தின் சுவாரஸ்யமான வரலாற்றைத் தெரிந்து கொண்டு விடுவோம்.

கி.மு.13 இல் கிரேக்க மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் வடக்கே உள்ள தெஸ்ஸாலி (Thessaly) என்கிற பிரதேசத்தில் இருந்து தெற்கே உள்ள பெலொப்பனேசியாவுக்கு (Peloponnesus) இடம் பெயர்ந்தார்கள்.

அப்போது அவர்களுக்கு அக்கியர்கள் என்று பெயர். கிரேக்கர்களின் ஒரு பிரிவினர் தான் இந்த அக்கியர்கள்.

வந்து தங்கியவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். அங்கு ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருந்த மக்களோடு ஒருங்கிணைந்து அவர்களையும் கிரேக்கர்களாக இனம் மாற்றினார்.

அக்கியர்களைப் போலவே இயோலியர், ஐயோனியர், டோரியர் ஆகிய பிரிவினர் ஒருவர் பின் ஒருவராக பெலொப்பனேசியாவில் குடியேறத் தொடங்கினர்.

ஒரு கட்டத்தில் கிரீஸில் வாழ்ந்த மக்கள் அனைவருக்கும் கிரேக்கர்கள் என்கிற பெயர் ஒட்டிக் கொண்டது.

கிரேக்கர்களுடைய மத நம்பிக்கைகள், கடவுள் நம்பிக்கைகள், கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள் எல்லாமே கிட்டத்தட்ட இந்தியர்களோடு ஒரு நேர்கோட்டில் இருப்பது போலவே தோன்றும். ஆனாலும் அத்தனையும் கிரேக்கர்கள் தொடர்பானவை.

எல்லோரைப் போலவும் கிரேக்கர்களுக்கு இரண்டு கண்கள். ஆம், மதம், விளையாட்டு என்கிற இரண்டும்தான் அவர்களுடைய கண்கள். அதையும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் கடவுள் வழிபாடு, விளையாட்டு என்றால் ஒலிம்பிக்.

ஏராளமான தெய்வங்களும் ஆலயங்களும் கிரேக்கநாட்டில் இருந்தன. பூஜைகள், அபிஷேகங்கள், ஆராதனைகள், தீபம் ஏற்றுவது என்று எல்லாமே வழக்கத்தில் இருந்தன.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர் அல்லது இனத்தைச் சேர்ந்தவர்தான் கோயிலில் பூசாரிகளாக வேண்டும்.

அவர்கள் மாத்திரமே பூஜை செய்ய வேண்டும் என்கிற விதிமுறைகள் எல்லாம் அங்கே அப்போது கிடையாது.

(தொடரும்)

என்னைத் துதி பாடுகிறவர்களைவிட என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களால்தான் நான் அதிகம் நன்மை பெற்றுள்ளேன். – காந்தியடிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சரத் வீரசேகர எம்.பிக்கு ஜனாதிபதி கொடுத்த தாளம்

ஆளுந்தரப்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில், தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதம் பேசுபவர்களில் முன்னிலை வகிக்கக் கூடியவர் யாவர்? எனக் கேள்வி எழுப்பினால்,

பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர என்பதே பதிலாக இருக்கும்.

என்னவோ தெரியவில்லை. காலத்துக்குக் காலம் ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் அல்லது இருவர் மிகமோசமாகத் தமிழ் மக்களை எதிர்ப்பர். தமிழ் மக்களுக்கு ஆத்திரம் வரக்கூடியதாகக் கதைப்பர்.

இவ்வாறு கதைப்பதற்கென்றே அரசாங்கம் தெரிவு செய்து விடுகிறதோ என்றுகூட எண்ணத் தோன்றுமளவுக்கு ஆளுந் தரப்பைச் சேர்ந்த ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்மண் தெரியாமல் தமிழ் மக்களை மிக மோசமான வார்த்தைகளால் வஞ்சிப்பர்.

அதேவேளை இத்தகையவர்கள் இனவாதம் கக்கும்போது, அவர்களைக் கட்டுப்படுத்துவதில் ஜனாதிபதியோ பிரதமரோ கவனம் செலுத்துவதாகவும் இல்லை.

மாறாக இனவாதம் பேசினால் தண்டிக்கப்படுவர் என அரசாங்கம் தமிழ் மக்களை – தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை எச்சரிக்கை செய்வதையும்,

சில இடங்களில் இனவாதம் பேசினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தமிழ் மக்களைக் கைது செய்த சம்பவங்களும் உண்டு.

ஆனால் இனவாதம் பேசினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மருந்துக்குக்கூட ஒரு சிங்களவரேனும் கைது செய்யப்படவில்லை.

உண்மையில் இனவாதம் பேசுவதும் இனவாதத் தீயை மூட்டுவதும் சிங்களத் தரப்பினர் என்பது தெரிந்த விடயம்.

ஆனால் அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், ஆளுந்தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் அண்மைக்கால உரைகள் தமிழ் மக்களை வலிந்து சீண்டுவதாக உள்ளன.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கூறியது முதல், தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஆதிக்குடிகள் என்று கூறிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை வார்த்தைகளால் கடிந்தது வரையில் சரத் வீரசேகரவின் இனவாதம் எல்லை கடந்து தாண்டவம் ஆடுகிறது.

இவ்வாறு இனவாதத்தைத் தூண்டி விடுகின்ற ஒருவரை பொதுப் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்த நியமனம் எதற்கானது? தமிழ் மக்களுக்கு எதிராக சரத் வீரசேகர பாடுகின்ற பாட்டுக்கு தாளம் போட்டால் நன்றாக இருக்கும் என்பதற்காகவா? என்பதுதான் நம் கேள்வி.

### கிளிநொச்சி வைத்தியசாலைக்கு

## நோயாளர்களை பார்வையிட வருவோர் இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிட வருவோர் இயன்றளவு வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இனங்காணப்பட்ட முதலாவது கொரோனா நோயாளரினை, கோவிட் தடுப்பு முன்னெடுப்பு தொடர்பான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வெளிநோயாளர் பிரிவு, தனிமைப்படுத்தல் விடுதி, மருத்துவ விடுதிகளின் பணியாளர்கள் பலர் கையாண்டிருந்தனர்.

முன்னர் ஏனைய வைத்தியசாலைகளில் முதலாவது நோயாளி இனங்காணப்பட்ட போது, வைத்தியசாலை அல்லது விடுதிகள் முற்றாக மூடப்பட்டிருந்ததுடன் பலர் தனிமைப்படுத்தலுக்கும் உள்ளான நிலைமை காணப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கோவிட் முன்னேற்பாடுகள் உரிய வகையில் கடைப்பிடித்தமையால் வைத்தியசாலையோ விடுதியோ மூடப்படாமலும் பல சுகாதார ஊழியர்கள் தனிமைப்படுத்தபடாமலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

நெருங்கிய தொடர்பினை பேணிய 03 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைவரதும் பாதுகாப்பினை மேலும் உறுதி செய்தல் பொருட்டு அந் நோயாளியின் சிகிச்சையில் தொடர்பு கொண்டிருந்த அனைத்து சுகாதார ஊழியர்களுமே சுய தனிமைப் படுத்தபட்டிருக்கின்றனர்.

வைத்தியசாலையின் சேவைகள் அனைத்தும் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அதேவேளை நோயாளர்கள் தங்களுக்கான சிகிச்சையினை தடையின்றி பெற்றுக்கொள்ளமுடியும். மாதாந்த கிளினிக் வருகை தரும் நோயாளர்கள் நோய்த்தாக்கம் இருப்பின் மற்றும் வைத்திய ஆலோசனை தேவைப்படுமிடத்து அச்சமின்றி நேரடியாக வருகைதந்து சிகிச்சை பெறுவதுடன் மாதாந்த மருந்துகள் தேவைப்படுவோர் 021 228 3037 என்ற தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு தங்களுக்கான மருந்துகளை வீடுகளிலேயே பெற்றுக்கொள்ளமுடியும் என வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை 9 மணியிலிருந்து 12 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்கட்டு, கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டித்தெரு வரை, இலந் தைக்குளம், புங்கன்குளம், முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு, கல்வியங்காட்டு சந்தி, கிளிகடைச் சந்தி, நல்லூர் பூங்கனிச்சோலை, இராமலிங்கம் சந்தி, ஆடியபாதம் வீதி, ராஜவீதியிலிருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் வரை, சட்டநாதர் வீதி, நல்லூர் கோவில் வீதியின் ஒரு பகுதி, சிவன் அம்மன் வீதியின் ஒரு பகுதி, நல்லூர் மாநகர சபை அலுவலகம், நல்லூர் செம்மணி வீதி வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம், நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), SOS சிறுவர்பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியரிங் பி.எல்.சி. ஆகிய இடங்களிலும்

காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களிலும்

நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கலட்டி, நாச்சிமார்கோவில் கே.கே.எஸ். வீதியிலிருந்து சிவன் கோயில் கே.கே.எஸ். வீதிவரை, அரசடி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, சிவன் பண்ணை வீதி, மானிப்பாய் வீதி, இராமநாதன் வீதி, ஹரிகணன் அச்சகம், எவகிறீன் அச்சகம், அண்ணா மலையான் ஸ்ரீ ராகவேந்திரா என்டர்பிறைசஸ் ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி **பிரதேசத்தில்** புளியம்பொக்கணை, தருமபுரம், விசுவமடுப் பிரதேசம், விசுவமடு பார்மேஸ்அரிசிஆலை, வள்ளுவர்புரம், இளங்கோபுரம், அம்பகாமம், புலுமச்சினாதகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்."
-தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)

16 2020

பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு

16 Days of Activism Against Gender Based Violence- 2020

JSAC

ஆண், பெண் ஏற்றத்தாழ்வும் பாரபட்சம் காட்டுதலுமே பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கான மூலகாரணங்கள்

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

ஊடக அனுசரணை: வலம்புரி

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உயர உயர சோதனையும் வரும்

❖ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யும் கைகள் ஆகியவை அனைவருக்கும்தேவை.

❖ உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன், உண்மையில் பிடிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இதைக் கடைபிடிப்பவர்கள் வெற்றி பெறுவது உறுதி.

❖ ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது, அதை வெளிக்கொண்டு வருவதே நம்வாழ்க்கையின் லட்சியம். இதற்காக புறவாழ்க்கையிலும், அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டும்.

❖ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல் இங்கிருந்து தப்பி ஓட முயற்சி செய்யாதீர்கள். செய்யும் செயலில் வெற்றியோ, தோல்வியோ கவலைப்பட்டு கொண்டிருக்கக்கூடாது. தொடர்ந்து பணியைச் செய்ய வேண்டும்.

❖ மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து தான் ஆக வேண்டும்.

❖ கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய். மனிதர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கு நீ தொண்டு செய்தவனாகிறாய்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021



**எமது வர்த்தகக் கொள்கையானது உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும்.**

அதேபோன்று இன்று பல நாடுகளில், உலக தொற்று நோய்ப் பரவலின் காரணமாக தனியார் துறையின் வரையறைகளை எதிர்நோக்குவதில் முன்னொரு போதும் இல்லாத வகையில் தனியார் மற்றும் அரச துறைகளின் பங்களிப்பு மிகவும் கவனமாக சீரமைக்கப்பட்டது.

எமது நாடு கடந்த காலங்களில் கையெழுத்திட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளிலிருந்து திருப்திகரமான எவ்வித பயனையும் எம்மால் பெற முடியாமல் போனது. இந்த உடன்படிக்கையின் விளைவாக பல்வேறு தயாரிப்புத் துறையினர் பின்னடைவினை எதிர்நோக்கியதுடன் அதற்குப் பதிலாக தயாரிப்புத் தொழில் முயற்சியாளர்கள் இறக்குமதியாளர்களாக மாறினர்.

இந்த உடன்படிக்கைகள் காரணமாக நாடு எதிர்நோக்கிய வர்த்தக ரீதியில் பாதகமான தாக்கத்தினை தீர்க்க முடியாமல் போனது. இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் உடனான வர்த்தகத்தில் ஆசியாவில் மாத்திரம் பிரதான பொருளாதாரங்களில் ஐ.அ.டொ. 9000 மில்லியன் வர்த்தகப் பற்றாக்குறையினை நாம் கொண்டிருந்தோம்.

அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து உயர் தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களின் இறக்குமதியினை நாம் அனுமதிப்பதுடன் நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத விசேட மூலப்பொருட்கள் மற்றும் இடை நிலைப் பொருட்களையும் இறக்குமதி செய்ய அனுமதிப்பதன் மூலம் உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தியினை ஏற்படுத்த முடியும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு என்பன தேயிலை, மிளகு, பாரம்பரிய அலங்காரப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் அதேபோன்று நச்சுத்தன்மையற்ற மரக்கறிகள், தானியங்கள் மற்றும் பழங்கள் போன்ற எமது நாட்டிற்கேயுரிய விசேட விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்றுமதிச் சந்தைகளை விரிவாக்குவதற்கான இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இந்நோக்கத்திற்காக எமது வெளிநாட்டுத் தூதுவர்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். வங்கித்தொழில் நிதி மற்றும் பல்வேறு தொழில் வாண்மைத் துறைகள் உள்ளடங்கலான சேவைத் துறையினை ஆரம்பிப்பதற்கான நிலைமையில் நாம் இல்லை. எனவே, சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் இறக்குமதிகளை வரையறுப்பதன் மூலம் வர்த்தக இடைவெளியினை நிரப்புவதற்கான உபாயங்களுடன் வரையப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணியினைப் பயன்படுத்தி கடந்த 5 வருடங்களின் போது இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதி ஏறக்குறைய ஐ.அ.டொ. 5,318 மில்லியனாகும். இது அக்காலப் பகுதியில் பெறப்பட்ட படுகடனில் ஏறக்குறைய 21 சதவீதத்திற்குச் சமனானது என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், ஆகக் குறைந்தது சீரமைக்கப்பட்ட வாகனங்களாவது ஏற்றுமதி செய்யப்படவில்லை அல்லது வாகனங்களை பொருத்துகின்ற கைத்தொழிலொன்றேனும் எமது உள்நாட்டுச் சந்தையில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எமது வர்த்தகக் கொள்கையானது உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும்.

எனவே, எமது கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி சம்பாத்தியத்தினை அதிகரிக்கும் வகையிலும் உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான இறக்குமதி மாற்றீடுகளின் ஊடாக வெளிநாட்டுச் செலாவணியினை சேமிக்கின்றதுமான சீரானதும் நீண்டகால வருமானத்தையும் ஈட்டுகின்ற வர்த்தகக் கொள்கையொன்றினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உற்பத்திப் பொருளாதாரம் ஏற்றதென்பதனை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் முன்மொழிவுகள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

1. உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பொருட்கள் தவிர்ந்த விவசாய பொருட்களின் இறக்குமதியினை வரையறுத்தல் (எதிர்மறைப்பட்டியல்).

2. தெரிவு செய்யப்பட்ட விவசாய உற்பத்திகளுக்கான உள்நாட்டு உற்பத்திகளின் வழங்கல் மற்றும் கேள்வியினை சமநிலைப்படுத்துவதற்கு விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டினை விதித்தல்.

3. உள்நாட்டு உற்பத்திகளின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கு செஸ் வரியினை விதித்தல்.

4. நாட்டில் கிடைக்கப்பெறாத மூலப்பொருட்கள், ஏற்றுமதியினை ஊக்குவிக்கின்ற மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிக்கின்ற நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான இறக்குமதி வரிகளை நீக்குதல்.

5. மேற்குறித்த வகுதிகளிலுள்ள பொருட்கள் தவிர்ந்த அனைத்து இறக்குமதிப் பொருட்கள் மீதான இறக்குமதி வரியினை 10 மற்றும் 15 சத வீதங்களாக விதிப்பதுடன் அனைத்து இறக்குமதிகளையும் 0,10 மற்றும் 15 சதவீதங்கள் என்ற மூன்று வகுதிகளின் கீழ் வகுப்பாக்கம் செய்தல்.

6. ஏதேனும் பொருளொன்று இறக்குமதியின் போது பெறுமதி சேர்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்குமாயின், குறித்த அப்பொருளின் உள்நாட்டு உற்பத்திக்கும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

7. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகளை மிகவும் வினைத்திறனாக மாற்றுவதற்குத் தேவையான ஒழுங்குறுத்துகை நிறுவனங்களின் அலுவலர்கள் தேவையான சேவைகளை வழங்குவதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களத்திற்கு நியமிக்கப்படுவர்.

## நிர்மாணக் கைத்தொழில்

நிர்மாணம் சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி, தொழில்துறை சேவையின் விரிவாக்கம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வாழ்வாதார முன்னெடுப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு வழி அமைக்கக் கூடிய தேசிய பொருளாதாரத்தில் பத்து சதவீதத்திற்கும் மேலாக பங்களிப்புச் செய்யக் கூடிய நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்துதல். வழங்கல் சங்கிலியை மிகவும் பயன்மிக்கதாக ஆக்குவதற்கு நிர்மாணக் கைத்தொழில் சார்ந்த பல்வேறு நிறுவன ரீதியான அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிப்பத்திர நடைமுறைகளை எளிதாக்குவது அவசியமானதாகும். எனவே ஜனாதிபதி விசேட செயலணி வீடமைப்பு, விதிகள், நீர்ப்பாசனம், நீர் வழங்கள் போன்ற கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மூலப்பொருட்களின் மதிப்பீட்டைத் தயாரித்துள்ளது. அதன் பிரகாரம், சுற்றாடலுக்கு சேதம் ஏற்படாத இடங்களிலிருந்து கிரனைட், மணல், மண் போன்ற மூலப்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை விசேட ஒழுங்குகளை செய்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட அனைத்து அகழ்வாராய்ச்சி நிலையங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு குறுத்தொதுக்கப்படும். மேலும் அவை ஒரு இடைத்தரகர் இல்லாமல் நிர்மாணக் கைத்தொழில் மக்களுக்கு அந்த மூலப்பொருட்களை வழங்கும். உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத சீமெந்து, பிரிமிக்ஸ், இரும்பு கம்பிகள், பிற்றுமின் போன்ற சில மூலப்பொருட்கள் பாரிய வீடமைப்புத் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிர்மாண நடவடிக்கைகளுக்கு வழங்கல் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க மொத்த இறக்குமதியில் பெற்றுக்கொள்ளப்படும். நிர்மாண கைத்தொழிலின் தொழிலாளர் தேவைக்கு ஏற்ப திறமையான தொழிலாளர்களை வழங்குவதற்கான துரித நிகழ்ச்சித் திட்டங்களை தொழில் பயிற்சி நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

வெளிநாடுகளின் திறமையற்ற தொழிலாளர்கள் மீது நாம் நம்பிக்கை வைக்க முடியாதபடியினால், பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களம் தொழிலாளர் கேள்விக்கு தேவையான தொழிலாளர்களை பொருத்தமானதாக திட்டமிட்டுள்ளது. அதனால் நிர்மாணக் கைத்தொழிலின் ஒட்டுமொத்த செலவைக் குறைப்பதற்காக அரசாங்கம் வழங்கல் சங்கிலியைத் திட்டமிட்டுள்ளது.

அரச துறை கருத்திட்டங்களில் ஈடுபடும் ஒப்பந்தக்காரர்களுக்கு தொடர்ச்சியான கட்டணத்தைச் செலுத்துவதை உறுதி செய்வதற்காக, வங்கிகளிடமிருந்து சான்றளிக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதியில் தொண்ணூறு சதவீதத்தை பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் முன்மொழியப்படும். நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திர சாதனங்களின் மீதான இறக்குமதி வரிக்கு விலக்கு அளிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

நிர்மாணக் கைத்தொழிலில் மூலப்பொருட்களை மீள் சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட மீள் சுழற்சி தளங்களின் முதலீட்டாளர்களுக்கு பத்து ஆண்டு வரி விடுமுறையை நான் முன்மொழிகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் தேவையான காணிகள் வழங்கப்படும். விசேடமாக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நிர்மாண நடவடிக்கைளுக்காக எரிசக்தி பயன் மற்றும் சூழல் நட்பான முறைகள் பயன்படுத்தப்படும்.

## நகர அபிவிருத்தி

கொழும்பு துறைமுகம், நகர அபிவிருத்தி வலயம், கொழும்பு மற்றும் புற நகர்ப் பகுதிகள் அதேபோன்று நாட்டின் பிரதான நகரங்கள் என்பவற்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளினூடாக அடுத்த 5 - 10 வருடங்களுக்கான வளர்ந்து வரும் தொழிற்படையின் தேவையினை நிவர்த்தி செய்கின்ற வீடமைப்புத் தொகுதிகள் மற்றும் அதனோடிணைந்த சமூக வசதிகளின் விரிவாக்கம் எமது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான விடயமாகக் காணப்படுகின்றது.

கைத்தொழில், சேவை, வனப் பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவம் உள்ளடங்கலான பல்வேறு விரிவாக்கல் வாய்ப்புகள், தனியார் துறையினை நோக்காகக் கொண்ட தேசிய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நீண்டகால முதலீட்டுக்கு பொருத்தமானதாக அமையும்.

(தொடரும்)

## மாவீரர்களை...

ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு முன்பாக நேற்று மாலை 5.50 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

இளவாலையைச் சேர்ந்த அருட்தந்தை பாஸ்கரனே இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் குருமட அதிபராவார்.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு முன்பாக தீபந்தங்கள் அலங்கரித்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகிய நிலையில் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,33,101)

## கார்த்திகை தீப...

இடம்பெறவுள்ளதால் தவறாக புரிந்து கொண்டு அதனை தடுத்துவிடாதீர்கள் என யாழ்.இந்து சமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இந்து சமயப் பேரவை அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாளை ஞாயிற்றுக்கிழமை இந்துக்கள் பாரம்பரியமாக அனுஷ்டித்துவரும் திருக்கார்த்திகை தினம் அமைவதால் அன்றைய தினம் ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றி வழிபடுவது வழமையாக உள்ளது. இதன்மூலம் தீய விஷக் கிருமிகள் அழிவடையும் என்பதும் இந்துக்கள் நம்பிக்கை.

தற்போது மாவீரர் தினத்தை அடுத்து இத்தீபம் ஏற்றும் நிகழ்வு நடைபெற உள்ளதால் பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் இதை தவறாக புரிந்து இதனை தடுக்க முற்படலாமென பலர் அஞ்சுவதாக எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

ஆதலால் இந்துக்களின் பாரம்பரியமான இத்தினம் பண்டுதொட்டு நடைபெற்று வருகின்றமையை இந்நேரத்தில் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

உலகில் உள்ள இந்துக்கள் அனுஷ்டிக்கும் இந்நிகழ்வின் மகோன்னதமான புனிதத் தன்மையை புரிந்து கொள்வது அவசியமாகும்.

தற்போதுள்ள கொரோனா சூழலில் சுகாதார நடைமுறைகளைப் பேணி திருக்கார்த்திகை தினத்தை அனுஷ்டிக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## காணாமல்...

அரசியல் கைதியாக இருந்து விடுதலை செய்யப்பட்ட அரவிந்தன் அவரது வீட்டிற்கு முன்பாக விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தார். (ம-3,250,299)

## பரந்தனில்...

அஞ்சலி செய்தவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவீரர் நாளான நேற்று பரந்தன் சந்தியில் ஈகைச் சுடரேற்றிய பொதுமகன் ஒருவர் மாவீரர்களுக்காக அஞ்சலி செலுத்தியிருக்கின்றார்.

இதனையடுத்து அப்பகுதியில் பொலிஸார், இராணுவம் குவிக்கப்பட்டதுடன், அஞ்சலி செலுத்திய பொதுமகன் கைது செய்யப்பட்டதுடன், ஈகைச் சுடர்களையும் பொலிஸார் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதியால் வந்த ஊடகவியலாளர் ஒருவர் சம்பவத்தை புகைப்படம் பிடித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் அவருடைய அடையாள அட்டை, தொலைபேசி ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளதுடன், தொலைபேசியில் இருந்த புகைப்படங்களை அழித்துவிட்டு நீண்ட நேரத்தின் பின்னர் தொலைபேசி மற்றும் அடையாள அட்டையை மீள வழங்கியுள்ளனர். (ம-3)

## நெஞ்சுருக...

தமிழீழ மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு நீதிமன்றங்கள் ஊடாக தடை விதிக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை 6.05 மணிக்கு அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் மாவீரர்களுக்கான ஈகைச் சுடர்களை தமது இருப்பிடங்களிலேயே ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இராணுவம் மற்றும் பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு மிக மோசமான கெடுபிடிகள் மத்தியில் உணர்வுபூர்வமாக தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெற்றது.

இதேபோல் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர்களுக்கான அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. (ம-3)

## தமிழர் தாயகம்...

போர்க்கால சூழ்நிலைபோல தாயகம் எங்கும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய ஆலயங்கள், பொது இடங்கள், மாவீரர் விளக்கேற்றப்படுமென படைத்தரப்பு கருதும் இடங்கள் அனைத்தும் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் துயிலுமில்லப் பகுதியில் வீதி தடை செய்யப்பட்டுள்ளது. துயிலுமில்லப் பகுதியை யாரும் நெருங்க முடியாத விதத்தில் வீதியின் இரண்டு அந்தங்களும் தடையேற்படுத்தப்பட்டுள்ளது. வீதித் தடை செய்யப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கோப்பாயில் மாவீரர் அஞ்சலி செய்யப்படும் பகுதிக்கு அருகே, இராணுவத்தின் தண்ணீர் பவுசர் நிறுத்தப்பட்டு வீதி தடை செய்யப்பட்டுள்ளது. அங்கு பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் துயிலுமில்லம் இராணுவ முகாமாக அமைந்துள்ள நிலையிலும் அங்கு வீதியில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். கொடிகாமம் சந்தியில் இருந்து பருத்தித்துறை செல்லும் வீதி முழுமையான இராணுவ வலயத்தை போன்று தோற்றமளிக்கிறது.

குச்சொழுங்கைகள், சந்திகள், ஆலயங்களில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். (ம-3,18,100,250,281,312)

## மாவீரர்கள் எம்...

க்கு அஞ்சலி செலுத்தியபோது தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

## வடக்கில்...

துவபீட ஆய்வுகூடங்களில் நேற்று வெள்ளிக்கிழமை 400 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கும், ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த 13 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றைய பரிசோதனையில் கடந்த 21ஆம் திகதி கொழும்பிலிருந்து வீடு திரும்பிய நிலையில் 25 ஆம் திகதி தொடக்கம் சுய தனிமைப்படுத்தலிலிருக்கின்ற காரைநகரைச் சேர்ந்த நபரொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் கிளிநொச்சியில் நீர் விற்பனை நிலையத்தில் கடமையாற்றியவர்களுக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் குறிப்பிட்ட நிலையத்திற்குப் பாரவூர்தி மூலம் நீரைக் கொண்டு சென்ற சாரதியொருவர் தனிமைப்படுத்தலிலிருந்த நிலையில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல்நிலையத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கும், வவுனியா பெரிய கட்டு தனிமைப் படுத்தல் முகாமைச் சேர்ந்த ஐந்து பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18)

## கொரோனாவால்...

நேற்று வெள்ளிக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 107 ஆக அதிகரித்துள்ளது.

87, 54, 78, 36, 83, 69, 70 வயதுடைய 4 பெண்கள், 4 ஆண்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும் நாட்டில் நேற்றும் +473 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 22 ஆயிரத்து 501 பேர் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## தீர்த்தக் கடலில்...

தினத்தை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியினர் திரளாக கலந்து கொண்டு மெழுகு வர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

இறுதிக்கட்ட போரின்போது இலங்கையில் உயிர்த் தியாகம் செய்த விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக நாம் தமிழர் கட்சியினர் தமிழகம் முழுவதிலும் உள்ள பல்வேறு பகுதிகளில் நேற்று அஞ்சலி செலுத்தினர். (ம-3,100,281)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மஹஜன சம்பத
திகதி 2020/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 4319
X 7 0 6 8 4 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 27-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2614
G 29 48 50 62
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020 / 11 / 27
சீட்டிழுப்பு இலக்கம் 1552
சுபிரி இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 15 29 33 60
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0686
P 22 05 15 56 79

தன நிதானய
திகதி - 2020.11.27
சீட்டிழுப்பு இலக்கம் - 356
E 13 22 62 82
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1115
சீட்டிழுப்பு திகதி: 27.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 86,747,495
வெற்றி இலக்கங்கள் 28 47 65 75 V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3445
சீட்டிழுப்பு திகதி: 27.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,742,623
வெற்றி இலக்கங்கள் 14 49 59 74 W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 38,32,125/=
திகதி: 27.11.2020
வெற்றி வாரம்: 2996
வர்ணம்: கரு நீலம்
வெற்றி இலக்கங்கள் 21 24 55 57
மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,992,532

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1289
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 27/11/2020
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் T 15 25 32 55
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை 3,715,780

ஜய
656
27.11 2020
B 11 13 17 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,656,200
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# பருத்தித்துறை சுப்பர்மடத்தில் நினைவேந்தலுக்காக வைக்கப்பட்ட சிவப்பு - மஞ்சள் கொடிகள் அகற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை, சுப்பர் மடம் பகுதியில், போரில் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களது நினைவாக நேற்று தமது வீட்டில் நினைவேந்தலை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த நிலையில் திடீரென இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோடிக்கப்பட்டிருந்த சிவப்பு-மஞ்சள் கொடிகளை அகற்ற வைத்த சம்பவம் அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியது.

போரில் இறந்தவர்களின் நினைவாக வருடா வருடம் நவம்பர்-27 அன்று தமது வீட்டில் அவர்களது இறந்தவர்களின் படத்தை வைத்து சிவப்பு - மஞ்சள் கொடிகளால் அலங்காரம் செய்து நினைவேந்தலுக்கு தயார் செய்திருந்த நிலையில் நண்பகல் திடீரென சென்ற இராணுவத்தினரால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் நினைவேந்துமாறு நீதிமன்றமே அனுமதி வழங்கியுள்ள நிலையில் தாம் தமது உறவுகளுக்கு தமது வீட்டில் நினைவேந்தலை செய்ய உள்ளதாக வீட்டார் இராணுவத்திற்கு தெரிவித்த போதிலும், அங்கு அலங்கரிக்கப்பட்டிருந்த சிவப்பு - மஞ்சள் கொடிகளை அகற்றவைத்துள்ளதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

எவரும் ஒன்று கூடி நினைவேந்தலை முன்னெடுக்க வேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்ட நிலையில் மேலதிக இராணுவத்தினர் திரும்பிச் சென்றிருந்த போதிலும் அங்கு தொடர்ந்து இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த வீட்டாரின் மூன்று பேர் மாவீரர்களாகிய நிலையில் அவர்களது திருவுருவப் படம் வைக்கப்பட்டு கார்த்திகை பூ கோலம் போடப்பட்டு நினைவேந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# முன்னணியினரின் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் மாவீரர்களை நினைவேந்தும் நேற்றைய நாளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தடைகளைக் கடந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இவ் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி சுஹாஷ், கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் சுகாதார நடைமுறைகளுக்கமைய கலந்துகொண்டிருந்ததுடன், மாவீரர்களுக்கு தமது உணர்வுபூர்வமான அஞ்சலியையும் செலுத்தியுள்ளனர். (ம-03)

# சிறீதரன் எம்.பி தனது வீட்டில் மாவீரர்களுக்கு அஞ்சலி



(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தனது இல்லத்தில் நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

குறித்த வணக்க நிகழ்வில் நினைவுச்சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் வட போர்முனைக் கட்டளைத்தளபதி பிரிகேடியர் தீபன் மற்றும் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப் கேணல் கில்மன் ஆகியோரின் தந்தை ஏற்றினார். (ம-03,312)


## மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு விசாக நட்சத்திரம்
1ஆம் பாதத்தில் ( உதயத்தில் செவ்வாய் ) பிறந்த
அரச உத்தியோகம் பார்க்கும் இந்து கௌரவ
குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு
மணமகள் தேவை.
(C-784)

தொடர்பு : 077 460 9400

## பிரத்தியேக வகுப்பு
## வணிகக் கல்வியும் கணக்கீடும்

( தரம் 10,11 )

ஆசிரியர் சி. கிருபாகரன் B.Com

Note 1 : மாணவர்களின் தேவைக்கேற்ப நேரம் ஒழுங்குபடுத்தித் தரப்படும்.
Note 2 : குழு வகுப்புக்களாகவோ or தனிப்பட்ட வகுப்புக்களாகவோ மாணவர்களின் வசதிக்கேற்ப ஒழுங்குபடுத்தித் தரப்படும்.
Note 3 : வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும்.
(4778)

ஆரம்பம் : 01.12.2020 077 976 0560

## காணிகள் தேவை

யாழ்ப்பாணம்,
கோப்பாய், நல்லூர்
பிரதேச செயலக
எல்லைகளுக்குள்
20 பரப்பு தொடக்கம்
50 பரப்பு வரையான
காணி தேவை.
(4774)
( தரகர் தேவையில்லை. )

076 221 2037

## வீடு வாடகைக்கு

நாவலர் வீதி, TCT முன்பாக
பல்கலைக்கழக மாணவிகளுக்கு
வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
(4777)

077 515 1352

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி 2 ஆம்
ஒழுங்கையில் 2 1/2 பரப்புக்
காணி வெட்டுக்கிணற்றுடன்
விற்பனைக்கு உண்டு.
(4597)

076 702 3565

## அன்னா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் ≫1150/=
5kgக்கு மேல்
11kgக்கு மேல்
21kgக்கு மேல்
கட்டணம் குறைவு
(C-760)
லண்டன் ➤1050/= இத்தாலி ➤1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

## காணி தேவை

பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி, இராச
வீதியில் யாழ். நகரில் இருந்து 10 Km
தூரத்திற்குள் 3 பரப்புக்கு குறைவான
காணி வேண்டும்.
வீதியோரம் விரும்பத்தக்கது.
தவறின் வீதியில் இருந்து 100 m
தூரத்துக்குள் வேண்டும்.
( தரகர் தேவையில்லை. )
(C-788)

077 135 0881, 077 356 1322


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## பராசக்தி சிவநாதன்



"துணையும் கொழுந் தெய்வமும்
பெற்ற தாயும் சுருதிகளின்
அணையும் திரிபுர சுந்தரி
ஆவ தறிந்தனமே விரவும் புதுமலர்
இட்டு நின் பாத விரைக்கமலம்
உரவும் குலிசமும் கற்பகக் காவும்
உடையவரே "

தோற்றம் 06.06.1938

மறைவு 10.12.2019

(8)

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்


10வருட வெற்றிகரமான சேவையில்....

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக
கனடா சென்ற மாணவர்களினை நேரில்
வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 05/12/2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.

இலவச பதிவுகளுக்கு : 0779265447 (please call at 10am - 5pm)

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம்
ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
(C-735)

0779265447 / 0217200989

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025/=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-735)

## 2021 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ZOOM வகுப்புக்கள்

ஆரம்பம் - 05.12.2020

ஆசிரியர்

திரு. வே. அன்பழகன்

மாணவர் எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால்
முற்கூட்டியே 077 306 8999
என்ற எண்ணுக்கு தொடர்பு
கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
(4780)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.